# குழந்தை எப்படிப் பிறக்கிறது?



பொ. திருகூடசுந்தரம்
M.A., B.L.

# குழந்தை எப்படிப் பிறக்கிறது ?

பொ. திருகூடசுந்தரம், எம்.ஏ., பி.எல்.

நாம் எப்படி இந்த உலகத்தில் பிறந்தோம்? இவ்விஷயத்தை அறிவது அற்புதமான ஒன்ருகும். இந் நூலில் செடி, கொடிகள், பறவைகள், மிருகங்கள் எப்படிப் பிறக்கின்றன என்பதுமுதல் குழந்தை உற்பத்தியாவது மற்றும் பிறத்தல்வரை மிக விரிவாகப் படங் களுடன் எளிமையாக அனைவருக்கும் பயன் படும் வண்ணம் தரப்பட்டிருக்கிறது. உங்கள் அறிவு வளர்ச்சிக்கு வழிகூறும் சிறந்த நூல்.

பாரதி பதிப்பகம்

108, உஸ்மான் சாலை,
தி. நகர்., சென்னை-600 017.

பதினைந்தாம் பதிப்பு: ஏப்ரல். 84.

விலை ரூ. 6.00

ஆசிரியர்

# முகவுரை

அன்பார்ந்த குழந்தைகளே! உங்களுக்கு இந்தப் புஸ்தகத்தை சந்தோஷத்துடன் அளிக்கிறேன். நீங்கள் குழந்தைகள். குழந்தைப் பருவம் மிகவும் முக்கியமானது. அந்தப் பருவத்தில்தான் உங்களுடைய உடலைப் போலவே உங்களுடைய அறிவும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கின்றது. குழந்தைகளாகிய நீங்கள் காலையில் கண் விழித்ததுமுதல் இரவில் உறங்கும் வரை ஒரு நிமிஷமாவது சும்மா இருக்கிறீர்களா? உங்கள் கைகள் எதையேனும் செய்து கொண்டிருக்கும். உங்கள் கண்கள் எதையேனும் கவனித்துக் கொண்டிருக்கும். உங்களுக்குச் சந்தேகங்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். எதைக் கண்டாலும் இது ஏன் உண்டாயிற்று, எப்படி உண்டாயிற்று என்று உங்கள் மனத்தில் கேள்விகள் உதித்துக்கொண்டே இருக்கும். அவற்றை உங்கள் அப்பா அம்மா விடமாவது, அவர்கள் அருகில் இல்லா விட்டால் அருகிலுள்ள வேறு யாரிடமாவது கேட்டுக் கொண்டே இருப்பீர்கள். இப்படிக் கேள்விகள் கேட்டுக் கேட்டு உங்கள் அறிவை வளர்த்து வருகிறீர்கள்.

இந்த மாதிரிதான் என்னுடைய குழந்தைகளும் என்னிடம் கேள்விகள் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். நேற்று மழை பெய்தது. உடனே என் பெண் குழந்தை ஓடிவந்து அப்பா! மழை பெய்தால் குளிருதே, அது ஏன்? அப்பா! என்று கேட்டாள்.

இந்த மாதிரி இவர்கள் கேட்கும் கேள்விகளையும் அவைகளுக்கு நான் கூறிய பதில்களையும் சேர்த்து "குழந்தைகள் கேள்வியும் பதிலும்" என்றும் "அப்பாவும் மகனும்" என்றும் இரண்டு நூல்கள் அச்சிட்டிருக்கின்றேன்.

என்னுடைய பெண் குழந்தைக்குப் பத்து வயது. அவளுக்குச் சில மாதங்கட்கு முன் ஒரு தங்கச்சி பிறந்தாள்.

அவளைக் கண்டதும் என் பெண்ணுக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை. உங்களுக்கும் சின்னஞ் சிறு குழந்தைகளைக் கண்டால் சந்தோஷமாயிருக்குமல்லவா? புதிதாகப் பிறந்த குழந்தை தூங்கும். பொழுது சிரித்துக் கொண்டே தூங்கும் என் பெண் அதைப் பார்த்துப் பார்த்து மகிழ்வாள். குழந்தைக்கு அம்மா பால் கொடுக்கும் பொழுது அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு குழந்தையின் காலையும் கையையும் தொட்டு ''அம்மா! பட்டுப்போல் எவ்வளவு மிருதுவா யிருக்கிறது! ரோஜாப் பூப்போல் எவ்வளவு அழகா யிருக்கிறது!'' என்று மகிழ்ந்து கொண்டிருப்பாள்.

இப்படி யிருக்கும் பொழுது ஒரு நாள் அவள் திடீரென்று ஓடிவந்து ''அப்பா! தங்கச்சி அம்மா வயிற்றிலிருந்து எப்படி வந்தாள்?'' என்று என்னிடம் கேட்டாள். குழந்தைகள் என்ன கேள்வி கேட்டாலும் பதில் சொல்ல வேண்டுமல்லவா? இல்லையானல் உங்களுக்குத் திருப்தி உண்டாகாதல்லவா? அதனல் அவளுக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தேன்.

உலகத்தில் காணப்படும் விஷயங்களை நாம் அறிந்து கொள்ளுதல் அவசியம். அது நம்முடைய அறிவைப் பெருக்கும்; ஆனந்தமாகவும் இருக்கும். ஆனல் நாம் எப்படி இந்த உலகத்தில் பிறந்தோம் என்ற விஷயத்தை விபரமாக அறிவது அதை யெல்லாம்விட அற்புதமாயிருக்கும். இந்த அற்புதத்தைச் சொல்லும்படியே என் குழந்தை கேட்டாள். அவளுடைய கேள்விகளுக்கு நான் பதில் சொல்லச் சொல்ல அவளுக்கு அதிசயமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. அவளுக்கு எப்படிச் செடி கொடிகள், பறவைகள், மிருகங்கள் பிறக்கின்றன என்பதைக் கூறி குழந்தை பிறப்பதையும் விபரமாகச் சொன்னேன். அதெல்லாம் அறிய உங்களுக்கும் ஆனந்தமாயிருக்கும்.

அத்துடன் நாம் எப்படி வாழ்ந்தால் நல்ல ஆரோக்கியமும் அழகும் பலமும் உள்ள குழந்தைகள் பிறப்பார்கள் என்பதையும் அவளுக்குச் சொன்னேன். அவள் அப்படியே நடப்பதாகக் கூறுகிறுள். நீங்களும் அப்படியே நடக்க வேண்டும். அப்பொழுதான் நாம் எல்லோரும் சந்தோஷமாக வாழ்வோம்.

**பொ. திருகூடசுந்தரம்**

# பொருளடக்கம்


1. தங்கை அம்மா வயிற்றில் எப்படி இருந்தாள்?
2. அங்கே எப்படிப் போனாள்?
3. எப்படி முட்டை பெரிதாகின்றது?

    செடி — மிருகம்

    மீன் — மனிதன்

    பறவை

4. எப்படிக் கரு உண்டாகிறது?

    செடி — மிருகம்

    மீன் — மனிதன்

    பறவை

5. ஏன் அடிக்கடி குழந்தை பிறப்பதில்லை?
6. எப்படிக் கரு உண்டாகிறது?
7. எப்படிக் கருப்பையில் வளர்கிறது?
8. எத்தனை மாதம் வளர்கிறது?
9. எப்படி வளர்கிறாள்?
10. எப்படி வெளியே வருகிறாள்?
11. பிறந்த பிறகு என்ன செய்வார்கள்?
12. ஏன் ஒரு தடவை ஒரு குழந்தை மட்டும்?
13. ஆண் பெண் வித்தியாசம்.
14. என் வயிற்றில் குழந்தை உண்டாகுமா?
15. நல்ல குழந்தைகள் பெறுவது எப்படி?
16. கல்யாணம் என்றால் என்ன?

பாப்பா:—அப்பா! தங்கச்சியைப் பார் எவ்வளவு அழகாயிருக்கிறுள். அப்பா! அவள் எவ்வளவு சின்னக் குழந்தையாக இருக்கிறுள். அவள் அம்மா வயிற்றிலிருந்து வந்தாளாம். நானும் அம்மா வயிற்றிலிருந்து தான் வந்தேனும், நானும் அப்பொழுது தங்கச்சியைப் போல சின்னக் குழந்தையாகத்தான் இருந்தேனும்.

அப்பா:—ஆமாம் அம்மா! நீயும் அம்மா வயிற்றிலிருந்து தான் வந்தாய், நீயும் சின்னக் குழந்தையாகத்தான் இருந்தாய். அம்மா! நீ மட்டுமா அப்படி? நானுங்கூட என்னுடைய அம்மா வயிற்றிலிருந்துதான் வந்தேன், நானும் அப்போது தங்கச்சியைப் போலச் சின்னக் குழந்தையாகத் தான் இருந்தேன். அம்மாவும் அப்படித்தான், மாமாவும் அப்படித்தான், அண்ணனும் அப்படித்தான். எல்லா மனிதர்களும் அவர்களுடைய அம்மா வயிற்றிலிருந்து தான் வந்தார்கள் .அப்பொழுது சின்னக் குழந்தையாகத்தான் இருந்தார்கள் பிறகுதான் சிறிது சிறிதாக வளர்ந்து பெரிய வர்கள் ஆகிறுர்கள். தங்கச்சியும் நீயும் அப்படியே வளர்ந்து அம்மா மாதிரி பெரிய பெண்கள் ஆவீர்கள்.

பாப்பா:—அப்பா! இது மிகவும் ஆச்சரியமாயிருக்கிற தல்லவா?

அப்பா:—அம்மா! ஆச்சரியம்தான். அம்மா தோட்டத் தில் கீரைத்தண்டு போட்டிருக்கிறுளே தெரியுமல்லவா? அது முதலில் எப்படியிருந்தது?

பாப்பா:—அப்பா! கீரைத்தண்டுகள் முதலில் சிறியவை களாக இருந்தன. இப்பொழுது பெரிய தண்டாக உயரமாக வளர்ந்திருக்கின்றன.

அப்பா:—அதுபோல்தான் நாமும் முதலில் சிறு குழந்தை யாக இருந்து பெரிய மனிதர்களாக ஆகிறோம் அம்மா! கீரைத்தண்டு சிறுசெடி-ஆலமரம் பார்த்திருக்கிறுயா?

பாப்பா:—ஆமாம் அப்பா! நாம் நடக்கப் போகும் பொழுது சாலையில் நிற்கிறதே அதுதானே அது எவ்வளவு பெரிதாக இருக்கிறது. அதுதான் எல்லா மரங்களிலும் பெரிய மரமோ அப்பா! அதன் பழம் கோலிக் காயளவு உருண்டையாய் சிவப்பாய் அழகாய் இருக்கிறது அப்பா.

அப்பா:—ஆமாம், அம்மா! அதனுள் என்ன இருக்கிறது தெரியுமா?

பாப்பா:—அதனுள் விதை இருக்கிறது அப்பா! அந்த விதை அம்மா தாளிக்கும்போது உபயோகிக்கிறார்களே கடுகு. அது மாதிரியே இருக்கிறது.

அப்பா:—அந்த விதை முளைக்கும் பொழுதும் அதன் முளை சிறிதாகத்தான் இருக்கும் பிறகுதான் அது வளர்ந்து அவ்வளவு பெரிய மரமாகஆகின்றது. இப்படியேதான்எல்லா செடிகளும் மரங்களும் முதலில் சிறிய முளையாயிருந்து பெரிதாகின்றன.

பாப்பா:—அப்பா! இதுவும் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆலம்விதை எவ்வளவு சிறியதாயிருக்கிறது, ஆலமரம் எவ்வளவு பெரிதாக இருக்கிறது.

அப்பா:—அம்மா! அதுமட்டுமா அப்படி? கோழிக் குஞ்சு பார்த்திருக்கிறாயே, அது எவ்வளவு சிறியதா யிருக்கிறது. அதுதான் பெரிய சேவலாகவும் பெட்டைக் கோழியாகவும் ஆகிறது. அதே மாதிரிதான் மிருகங்களும், சிறியனவாகப் பிறந்து பெரியனவாக ஆகின்றன.

பாப்பா:—அப்பா! திருவிழாவில் பெரிய யானை வருகிறதே, அதுவும் அப்படித்தானோ, அப்பா!

அப்பா:—ஆமாம், அம்மா! பெரிய யானையும் அப்படித்தான், சிறிய பூனையும் அப்படித்தான். எல்லாம் குட்டியாயிருந்துதான் பெரிய மிருகங்களாக ஆகின்றன.

பாப்பா:—அப்படியானல் குட்டி எப்படி அதன் அம்மாவின் வயிற்றுக்குள் போக முடியும்? நானும் தங்கச்சியும் அம்மாவின் வயிற்றிலிருந்து வந்ததாகச் சொல்கிருயே, நாங்கள் அம்மா வயிற்றுக்குள் எப்படிப் போனேம், அங்கே என்ன செய்தோம், அங்கிருந்து எப்படி வெளியே வந்தோம்? அப்பா!

அப்பா:—அம்மா! குழந்தை அம்மா வயிற்றுக்குள் போவதில்லை. அம்மா வயிற்றுக்குள்ளேயேதான் அது உண்டாகிறது.

பாப்பா:—அது எப்படி அப்பா? அம்மா வயிறும் நம்முடைய வயிறு மாதிரியே தானிருந்தது, பிறகுதான் பெரியதாயிற்று. இல்லையா அப்பா!

அப்பா:—ஆமாம் அம்மா! ஆனல் அதைக் கொண்டு தங்கச்சி வெளியேயிருந்து அம்மா வயிற்றுக்குள் போனள் என்று எண்ணதே.

பாப்பா:—அது என்ன அப்பா! நீ சொல்கிறது ஆச்சரியமாயிருக்கிறதே.

அப்பா:—ஆச்சரியம்தான், அது எப்படி என்று சொல்லுகிறேன், கேள், இந்தப் பூவரசம் பூவைப் பார்.

பாப்பா:—அப்பா! அது எவ்வளவு அழகாய் இருக்கிறது. அதன் மஞ்சள் நிறத்தைப் பார்த்துக் கொண்டே யிருக்கலாம் போல் இருக்கிறதல்லவா?

அப்பா:—ஆமாம் அம்மா! இப்பொழுது அதன் இதழ்களை நீக்கிவிடுகிறேன். உள்ளே நடுவில் என்ன இருக்கிறது பார்.




பூவரசம்பூ

பாப்பா:—நடுவேஒரு தண்டு மாதிரி அழகாக இருக்கிறது.

அப்பா:—அதை நீக்கி விடுகிறேன். அதனடியில் சிறு குமிழ் போலிருக்கிறது பார். அதை இப்போழுது கீறுகிறேன். அதனுள் என்ன இருக்கிறது?

பாப்பா:—அப்பா! வெள்ளையாகக் கடுகு மாதிரி இருக்கின்றனவே, அவை என்ன?

அப்பா :— அம்மா! அவைகளை முட்டைகள் என்று சொல்லுவார்கள். அந்த முட்டைகள் வளர்ந்துதான் விதைகள் ஆகின்றன. இதே மாதிரிதான் எல்லாச் செடியின் பூக்களிலும் மரங்களின் பூக்களிலும் நடுவில் ஒரு தண்டிருக்கும், அதனடியில் முட்டைகளிருக்கும். அந்த முட்டைகள் தான் விதைகள் ஆகின்றன. அந்த விதைகள் முளைத்துத் தான் செடிகளும் மரங்களும் ஆகின்றன.




பூவரசம்பூத் தண்டு
1. கீலம்
2, 3, கீலாக்கிராம்
4. சூல்வயிற்றில் முட்டைகள்.

பாப்பா :— இதெல்லாம் எவ்வளவு ஆச்சரியமா யிருக்கின்றன. எனக்குக் கேட்கக் கேட்க ஆசையாயிருக்கிறது.

அப்பா :—ஆமாம், அம்மா! இன்னும் பார் கோழி முட்டையிடுகிறதே. அதுவும் அவ்வளவு பருமனுக திடீரென்று கோழி வயிற்றில் உண்டாய் விடுவதில்லை. கோழி வயிற்றில் ஒரு சிறு பை உண்டு. அதில் பூவில் இருக்கிற மாதிரி சிறு சிறு முட்டைகள் இருக்கும். அவைதான் ஒவ்வொன்ருகப் பருத்து வெளியே வருகின்றன.

பாப்பா:—அப்படியானுல், நம்முடைய பசு கன்றுக் குட்டி போட்டிருக்கிறதே, அந்தக் கன்றுக் குட்டியும் பசுவின் வயிற்றில் சிறு முட்டையாயிருந்து தான் பிறகு பெரியதாக வளர்ந்து பிறந்ததோ?

அப்பா :—ஆமாம் அம்மா! அதுதான் விஷயம். பறவைகளின் வயிற்றில்போலவே மிருகங்களின் வயிற்றிலும் சிறு முட்டைகளுள்ள பைகள் இருக்கின்றன. அந்த முட்டைகள் பருத்து வளர்ந்துதான் குட்டிகள் உண்டாகின்றன. அதே மாதிரி தான் அம்மா, நீயும் தங்கச்சியும் அம்மா வயிற்றில் சிறு முட்டைகளாக இருந்து வளர்ந்து குழந்தைகள் ஆனீர்கள்.

பாப்பா :—அப்பா! அப்படியானால் நாங்கள் எந்த மாதிரியான முட்டைகளாக இருந்தோம். நீ பூவில் காட்டினையே அந்த மாதிரியா ? அல்லது அவற்றை விடப் பெரியதாகவா?

அப்பா :—அந்தமாதிரி யில்லை. அம்மா! நீங்கள் முட்டையாக இருந்தீர்களே, அந்த முட்டை கண்ணுக்குத் தெரியாது. ஒரு வெள்ளைக் கடுதாசியில் ஒரு கூர்மையான பென்சிலைக் கொண்டு ஒரு புள்ளி வைத்தால் எப்படியிருக்கும், அதே மாதிரித்தானிருக்கும்.


பாப்பா :—அவ்வளவு சிறியதா அப்பா! என்ன ஆச்சரியமாயிருக்கிறது. அந்தப் புள்ளி மாதிரியுள்ள சின்ன முட்டையிலிருந்தா நாங்கள் வந்தோம்.

அப்பா :— அம்மா! நீங்கள் மட்டுமா? உலகத்தில் உயிருள்ளவை எல்லாம் இந்த மாதிரியான சிறு முட்டைகலிருந்துதான் உண்டாகின்றன. ஆயிரம் பேர்க்கு நிழல் தரக்கூடிய ஆலமரமும் அப்படித்தான். வாலைக்கொண்டு அடித்துக்கொண்டு கப்பலை உடைத்துவிடக் கூடிய திமிங்கலமும் அப்படித்தான், மலைபோல் அசைந்து போகிற யானையும் அப்படித்தான். நாமும் அப்படித்தான்.

பாப்பா ;—அப்பா! நீ சொல்லச் சொல்ல எல்லாம் ஆச்சரியமாயிருக்கிறதே.

அப்பா:—ஆமாம் அம்மா, உலகத்திலுள்ள சகலவிஷயங்களும் ஆச்சரியம்தான். அதை அறிய ஆனந்தமாயிருக்கிறதல்லவா?

பாப்பா:—எனக்கு எல்லாம் சொல்லு அப்பா! எனக்கு எல்லாம் கேட்க ஆசையாயிருக்கிறது அப்பா! எல்லாம் முதலில் முட்டையாயிருந்து பிறகு தான் பெரியவைகள் ஆகின்றன என்று சொன்னயே, அப்படி ஆகிறது எப்படிஎன்பதையும் சொல்லு அப்பா!




பூவரசம்பூத் தண்டு
1. சூல்வயிறு
2. கீலம்
3. கீலாக்கிரம்

அப்பா:—அம்மா! அதையும் சொல்லுகிறேன். முதலில் இந்தப் பூவைப்பார். இதன் நடுவிலுள்ள தண்டைக் கீலம் என்று சொல்லுவார்கள். இதனடிபாகம் குமிழ்போல் இருக்கிறதே, அதைச் சூல் வயிறு என்று சொல்லுவார்கள். அந்தச்சூல் வயிறுதான் காயாகிறது அதனுள்தான் முட்டைகள் பருத்து வளர்ந்து விதையாகின்றன. காய்க்குள்ளே தானே விதைகள்இருக்கும், உனக்குத் தெரியுமல்லவா?

பாப்பா:—ஆமாம், அப்பா!காய்க்குள் தான் விதையிருக்கிறது. சில காய்களுக்குள் ஒரு விதை யிருக்கும். சில காய்களுக்குள் பல விதைகள் இருக்கின்றன.

அப்பா:—ஆமாம், அம்மா! ஆனல் எந்த விதையாயினும் அது காய்க்குள்ளாகவே இருக்கும். அந்தக் காய் பருத்துக் கனியாகி அது முதிர்ந்த பின் உலர்ந்து கீழே விழும். அப்பொழுது அதிலுள்ள விதைகள் மண்ணில் புதைந்த பிறகு மழை விழுந்து ஈரமானதும் முளைக்கும். அந்தமுளை வளர்ந்து செடியாகவோ மரமாகவோ ஆகும். இப்படி மரஞ் செடிகளில், முட்டைகள் முதலில் பூவிலுள்ள சூல் வயிற்றில்விதையாக வளர்ந்து, பிறகு மண்ணில் முளைத்துச் செடியாக வளர்

கின்றன. அம்மா! ஆற்றில் மீன்கள் கிடப்பதைப் பார்த்திருக்கிறாய் அல்லவா?

பாப்பா:—ஆம், அப்பா. ஆற்றில் அவைகள் எவ்வளவு அழகாய்ப் பளபள வென்று மின்னுகின்றன.

அப்பா:—அம்மா! அந்த மீன்களும் தாயின் வயிற்றிலுள்ள முட்டையிலிருந்துதான் உண்டாகின்றன.

பாப்பா:—அது எப்படி அப்பா?

அப்பா:—அம்மா! மீனானது ஆற்றில் எங்கேனும் ஜலம் அதிக ஓட்டமில்லாமல் தேங்கி நிற்குமிடத்துக்குப் போய் அங்கே தன்னுடைய வயிற்றடியிலுள்ள ஒரு சிறு துவாரத்தைத் திறக்கும். அது வழியாக அநேக சிறு முட்டைகள் வெளியே வரும். அந்த மீன் அங்கேயே அவற்றைச் சுற்றி ஒரு வாரம்வரை நீந்திக்கொண்டிருக்கும். அதன்பின்போய்விடும். இரண்டு வாரம் சென்ற பின் பார்த்தால் அந்த முட்டைகளெல்லாம் வெடித்து சிறு சிறு மீன்கள் நீந்திக் கொண்டிருக்கும். இப்படி மீன்கள் எல்லாம் முதலில் தாய் வயிற்றில் முட்டைகளாக வளர்ந்து பிறகு ஜலத்தில் தங்கி முதிர்ந்து வெடித்து மீன்களாக உண்டாகின்றன.

பாப்பா:—அப்படியானால் பறவைகள் எப்படி வளர்கின்றன அப்பா?

அப்பா:—பறவைகளின் வயிற்றிலும் முட்டைப் பைகள் இருக்கின்றன. அங்கேதான் முதலில் அவை வளர்ந்து முதிர்கின்றன. அதன்பின் பறவையானது மரத்தின் மீதோ அல்லது மரத்தின் பொந்துகளிலோ ஒரு கூடு கட்டி அதில் தன்னுடைய வாலுக்கடியே யுள்ள சிறு துவாரத்தின் வழியாக முட்டைகளை யிடுகிறது. அதன்பின் அந்த முட்டைகளின் மீது உட்கார்ந்து அடைகாக் கின்றது. இரண்டு மூன்றுவாரமானதும் முட்டைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளியே வருகின்றன. இப்படித்தான் சகல பட்சிகளுடைய முட்டைகளும் கூட்டில் முதிர்ந்து குஞ்சுகள் ஆகின்றன.

பாப்பா:—அப்பா! மரஞ் செடிகளின் விதைகள் மண்ணிலும், மீன்களின் முட்டைகள் நீரிலும், பட்சிகளின் முட்டைகள் கூடுகளிலும் முதிர்ந்து விளைவதாகக் கூறுகிறாய். அப்படியானால் கன்றுக்குட்டி எங்கே உண்டாகிறது அப்பா!

அப்பா:—அம்மா! மரஞ் செடிகளின் முட்டைகள் முதலில் பூவில் விதையாகி பிறகு மண்ணில் முளைக்கின்றன. மீன்களின முட்டைகள் முதலில் வயிற்றியிலும் பிறகு நீரிலும் முதிர்ந்து மீன்கள் ஆகின்றன, பட்சிகளின் முட்டைகள் முதலில் வயிற்றிலும் பிறகு கூட்டிலும் முதிர்ந்து பட்சிகள் ஆகின்றன. ஆனால் மிருகங்களின் வயிற்றிலுள்ள முட்டைகள் வயிற்றில் பாதி வெளியில் பாதி முதிராமல் வயிற்றிலேயே முதிர்ந்து மிருகங்கள் ஆகின்றன.

பாப்பா:—அது எப்படி அப்பா?

அப்பா:—அம்மா! அவைகளின் வயிற்றிலேயே ஒரு கூடு இருக்கிறது. அதைக் கூடு என்று சொல்லாமல் கர்ப்பப்பை என்றே சொல்லுவார்கள். அந்தப் பையில்தான் முட்டைப் பையிலுள்ள முட்டைகளில் ஒன்று வந்து தங்கி கொஞ்சம் வளர்ந்து பருத்துக் குட்டியாகின்றது. குட்டி பருவமடைந்ததும் வெளியே வந்து பிறந்து விடுகின்றது.

பாப்பா:—அப்படியானால் குழந்தைகளும் அம்மா வயிற்றிலேயேதான் கர்ப்பப் பையில் வளர்ந்து குழந்தைகள் ஆகின்றனவோ, நானும் தங்கச்சியும் அப்படித்தான் வளர்ந்தோமோ அப்பா?

அப்பா:—ஆமாம். நீங்களும் முதலில் அம்மாவின் வயிற்றிலுள்ள முட்டைப் பையில் கண்ணுக்குத் தெரியாத சிறு முட்டைகளாக இருந்து பிறகு கர்ப்பப் பையில் வளர்ந்து குழந்தைகள் ஆனீர்கள். அப்படியேதான் எல்லா மனிதர்களும் கர்ப்பப் பையில் வளர்கிறார்கள்.

பாப்பா:—அப்பா! அம்மா வயிற்றில் முட்டைப் பைகள் இருக்கிறதாகச் சொல்லுகிருயே, அவைகளில் எத்தனே முட்டைகள் இருக்கும்?

அப்பா:—அம்மா வயிற்றில் இரண்டு முட்டைப் பைகள் இருக்கின்றன.

பாப்பா:—அப்பா! இரண்டு பைகள் எதற்கு? ஒன்று போதாதா?

அப்பா:—அம்மா, நமக்குக் கண்கள் ,காதுகள், கைகள் கால்கள், எல்லாம் இரண்டு இரண்டாக இருக்கின்றனவே, ஏன் தெரியுமா? ஒன்று கெட்டுப் போனல் மற்றென்றைக் கொண்டேனும் காரியங்களேச் செய்து கொள்ளலாம் அல்லவா? அதற்காகத்தான்.

பாப்பா :—அதே காரணத்துக்காகத்தான் அம்மா வயிற்றிலும் முட்டைப் பைகள் இரண்டாக இருக்கின்றனவோ, அப்பா!

அப்பா :—ஆம், அம்மா! அதற்காகத்தான்.

பாப்பா :—அது சரி, அப்பா! அந்தப் பைகளில் எத்தனே முட்டைகள் இருக்கும் அப்பா?

அப்பா :—ஆயிரக்கணக்கான முட்டைகள் இருக்கும் அம்மா! டாக்டர்கள் 30 ஆயிரம் என்று கூடக் கணக்குச் சொல்லுகிறுர்கள் அம்மா!

பாப்பா :—அப்படியானல் அம்மா வயிற்றிலிருந்து அடிக்கடி தங்கச்சிகளும் தம்பிகளும் பிறக்கவில்லேயே, ஏன்?

அப்பா :—அம்மா! அது ஏன் என்று சொல்லுகிறேன் கேள். அம்மா மாலேயில் குத்துவிளக்கு ஏற்றுவதைப் பார்த்திருக்கிருய் அல்லவா? அப்பொழுது அம்மா என்ன செய்கிருள்?

பாப்பா :—அப்பா! குத்துவிளக்கில் முதலில் எண்

ணெய் ஊற்றி திரித் திரித்துப் போடுகிருள். அதன் பின் தீக்குச்சியை உரைத்துத் திரியில் வைக்கிருள்.

அப்பா:—அப்பொழுது தீக்குச்சியிலுள்ள தீயானது திரியில் பற்றிக் கொள்கிறது. விளக்கு வெளிச்சம் தருகிறது, பார்த்தாயா?

பாப்பா :—ஆம் அப்பா! பார்த்தேன்.

அப்பா:—அப்பொழுது எது எரிகிறது? திரி எரிகிறது. ஆனல் வெறும் திரி எரியுமா? எரியும் கொஞ்ச நேரம்; பிறகு சாம்பலாகப் போய் அணைந்து போகும். அதனல் தான் அம்மா எண்ணெய் ஊற்றுகிருள். அப்பொழுது திரி வெகு நேரம் வரை நன்ருக எரியும்.

பாப்பா :—ஆமாம், அப்பா! அதனல்தான் அம்மா அடிக்கடி விளக்கில் எண்ணெய் ஊற்றுகிருள் போலிருக்கிறது.

அப்பா :—ஆமாம், அதற்காகத்தான். ஆனலும் விளக்கு எரிவதற்கு எண்ணெய் ஊற்றித் திரிப் போட்டால் போதுமா?

பாப்பா :— அப்பா! போதாது. எண்ணெய் ஊற்றித் திரிப் போட்டு வைக்கிருள். அப்பொழுது திரி எரியவில்லை, வெளிச்சம் உண்டாகவில்லை.

அப்பா :— அப்படியானல் எப்பொழுது வெளிச்சம் உண்டாகிறது?

பாப்பா :—திரியில் தீக்குச்சியை உரைத்து வைத்தால் தான் விளக்கு எரிகிறது, இல்லையானல் எரியவில்லை.

அப்பா :—அம்மா, பூவில் விதையுண்டாவதும், மீன், பறவைகளின் வயிற்றில் முட்டை உண்டாவதும் மிருகம், மனிதர் வயிற்றில் குழந்தை உண்டாவதும் அதேமாதிரி தான்.

பாப்பா :—அது எப்படி அப்பா? தெரியவில்லையே ய

அப்பா :--சொல்லுகிறேன். கேள். விளக்கில் எரிவ தெல்லாம் எண்ணெயும் திரியும்தான். ஆனாலும், அந்த இரண்டும் தாளுக எரிய ஆரம்பிப்பதில்லை. தீக்குச்சியை உரைத்து வைத்தால்தான் எரிய ஆரம்பிக்கின்றன. தீக் குச்சியிலுண்டாகும் தீ அந்த எண்ணெயையும் திரியையும் எரியும்படி ஆரம்பம் செய்து வைக்கின்றது. அதே போல் தான் அம்மா! பூவின் நடுவில் சூல் வயிற்றிலுள்ள முட்டை களும் தாமாக விதைகள் ஆகிவிட முடியாது.

பாப்பா:—அப்பா! அந்தச் சிறு முட்டைகள் தானே விதைகள் ஆவதாகச் சொன்னுய். அந்த முட்டைகள் அந்தச் சூல் வயிற்றில்தானே விதைகளாக முதிர்வதாகச் சொன்னுய்.

அப்பா:—ஆம், அம்மா! அதெல்லாம் உண்மைதான். ஆனல் அந்தச் சிறு முட்டைகளோடு வேறு ஒரு வஸ்து சேர வேண்டும்; அது சேர்ந்தால்தான் அந்த முட்டைகள் விதைகள் ஆக முடியும். அந்த வஸ்து சேராவிட்டால் விதைகள் உண்டாகா பூக்கள் காய் உண்டாகாமல் உதிர்ந்து போகும்.

பாப்பா:—அநேக பூக்கள் காயாகாமல் உதிர்ந்து போகின்றனவே, அதுதான் காரணமோ, அப்பா!

அப்பா:—ஆம், அம்மா! அதுதான் காரணம்.


பாப்பா:—அப்படியானுல் காய் உண்டாகும்படி செய்யும் அந்த வஸ்து எது அப்பா! அந்த வஸ்து எப்படி அப்பா! காய் உண்டாகும்படி செய்கிறது?

அப்பா:—பூவின் நடுவிலே தண்டுபோல் ஒன்றிருக்கிறது, அதற்குக் கீலம் என்று பெயர் என்று சொன்னேனே, ஞாபக மிருக்கிறதா?


பாப்பா:—ஆம் அப்பா! அதன் அடியில்தானே சூல் வயிறும் அதனுள் முட்டைகளும் இருப்பதாகச் சொன்னுய்?

அப்பா:—அம்மா! அந்தக் கீலத்தின் பக்கத்தில்

நூல்போல் மெல்லிய காம்புகளும், அவைகளின் நுனியில் சிறு கொண்டைகளும் இருப்பதைப் பார். இந்தக் காம்புகளைக் கேசரங்கள் என்றும், கொண்டைகளை மகரந்தப் பைகள் என்றும் சொல்லு வார்கள். இந்த மகரந்தப் பைகளிலிருந்து மகரந்தப் பொடி சிந்திக் கொண்டிருப்பதைப் பார்கீலத்தின் தலையில் காணப்படும் கொண்டையை கீலாக்கிரம் என்று சொல்வார்கள். இந்த கீலாக்கிரக் கொண்டையில் ஒருவிதப் பசைநீர் உண்டு. அதனால் மகரந்தப் பொடி கீலாக்கிரத்தில் பட்டதும் அதில் ஒட்டிக் கொள்ளும். பிறகு அந்தப் பொடி ஒரு மெல்லிய குழல்போல்




பூவரசம்பூத் தண்டும் கேசரங்களும்
1. சூல்வயிறு
2. கீலம்
3. கேசரங்கள்
4. கீலாக்கிரம்




மகரந்தப்பை
1. கீலம்
2. மகரந்தப்பை
3. மகரந்தப்பொடி

நீண்டு கீலத்தின் ஊடே கீழே இறங்கும். அப்படி இறங்கியதும் அதிலுள்ள சத்து சூல் வயிற்றிலுள்ள முட்டைகளுகளுடன் சேர்ந்துவிடும். அப்படிச் சேர்ந்ததும் சூல் வயிறு காயாகவும், அதிலுள்ள முட்டைகள் விதைகளாகவும் ஆக ஆரம்பித்துவிடும். இப்படிக் கீலத்தின் ஊடே கீழே இறங்கும் மகரந்தப் பொடியை ஆண் தாது என்றும், கீலத்தின் அடியிலுள்ள முட்டையைப் பெண் தாது என்றும் கூறுவார்கள்.

பாப்பா :—அப்பா! இது நீ முன்னால் சொன்னதை விட அதிக ஆச்சரியமாயிருக்கிறதே! இதோ மஞ்சள் நிறமாயிருக்கிறதே, கை வைத்தால் ஒட்டிக் கொள்கிறதே, அதுதானே மகரந்தப் பொடி. அந்தப் பொடி எவ்வளவு மெல்லியதாக இருக்கிறது, அது எப்படிக் குழல்போல்

நீரும், அதன் வழியாக எப்படி ஆண் தாது இறங்கும், அந்த ஆண் தாது எப்படிப் பெண் தாதுவுடன் சேரும்? அப்பா! இதெல்லாம் கேட்க ஆச்சரியமாயிருக்கிறது.

அப்பா :—ஆம், அம்மா! மீன் எப்படித் தெரியுமா? அதைச் சொல்லுகிறேன்., கேள். நான் முன்னால் சொன்னது போல் மீன் அதாவது பெண் மீன் முட்டை யிடுவதற்காக நீர் தேங்கிய இடம் சென்று தன்னுடைய அடி வயிற்றி லுள்ள சிறு துவாரத்தின் வழியாக முட்டைகளை இடும். அப்பொழுது அதனுடன் வந்த ஆண் மீன் அந்த முட்டை களின்மீது தன்னுடைய அடி வயிற்றிலுள்ள சிறு துவாரத் தின் வழியாக ஒருவித நீரை வெளியே விட்டுக்கொண்டு சுற்றிச் சுற்றி வரும். அந்த நீர் பட்டதும் முட்டைகள் பருவ மடைய ஆரம்பிக்கும். கடைசியில்மூன்று வாரங்கள் ஆனதும் அந்த முட்டைகளிலிருந்து மீன் குஞ்சுகள் வெளியே வரும். ஆண் மீனின் நீர் படாத முட்டைகள் இவ்விதம் மீன் குஞ் சுகள் வராமல் அழிந்து போகும், அம்மா! பார்த்தாயா? மீன் விஷயத்திலும் பெண் தாதுவுடன் ஆண் தாது சேர்ந் தால்தான் மீன் குஞ்சுகள் உற்பத்தியாகும்; இல்லையானால் உற்பத்தியாகாது. ஆண் மீனுடைய நீர்தான் பெண் மீனின் முட்டைகளைக் குஞ்சு பொரிக்கும்படி செய்கிறது.

பாப்பா :—அப்பா! பறவைகளும் இப்படித்தான் உண் டாகின்றனவோ? அதையும் சொல்லு அப்பா!

அப்பா :—அம்மா! சில சமயங்களில் சேவற் கோழி பெட்டைக் கோழி மேலே ஏறி உட்கார்ந்து கொண்டு கொத்தும்; நீ கூட சில சமயங்களில் அவைகளைப் பார்த்து, அம்மா! கோழிகள் சண்டை போடுகின்றன என்று சொல்லி அவைகளை விரட்டுவாய் அல்லவா?

பாப்பா :—ஆம் அப்பா! அவைகள் அப்படிச் சண்டை போடுவதைப் பார்த்திருக்கிறேன். அவைகள் ஏன் அப்பா, அப்படி அடிக்கடி சண்டை போடுகின்றன?


அப்பா :—அம்மா! அவைகள் சண்டை போடவில்லை. பெட்டைக் கோழியின் வயிற்றிலுள்ள கண்ணுக்குத்

தெரியாத சிறு முட்டைகள் பெரிய முட்டைகளாக ஆகி வெளியே யிடும்படி செய்வதற்காகவே சேவற் கோழி இப்படி மேலே ஏறிக் கொத்துகிறது.

*பாப்பா:*—அப்பா! நீ சொல்வது ஒன்றும் விளங்க வில்லையே! சேவற் கோழி பெட்டைக் கோழியின் மேலே ஏறினல் பெட்டைக் கோழியின் வயிற்றிலுள்ள சிறு முட்டைகள் பெரிய முட்டைகள் ஆய்விடுமா, அது எப்படி அப்பா?

*அப்பா:*—அம்மா! சேவற் கோழி பெட்டைக் கோழியின் மேலே ஏறியதும் சேவற் கோழியின் வாலின் அடியிலுள்ள ஒரு சிறு துவாரமானது, பெட்டைக் கோழி முட்டையிடுவதற்காக அதன் வாலின் அடியில் ஒரு சிறு தூவாரமிருக்கிறதாகக் கூறினேனே, அந்தத்துவாரத்துடன் ஒட்டும். அப்பொழுது சேவற்கோழியின் ஒருவித நீர்-அதுதான் ஆண் தாது அது பெட்டைக் கோழியின் வயிற்றுக்குள்ளே சென்று அங்குள்ள சிறு முட்டைகளுடன் சேரும், இப்படி ஆண் தாது பெண் முட்டையுடன் சேர்ந்ததும் அந்த முட்டைகள் பெரிய முட்டைகளாக ஆக ஆரம்பித்து விடும். பிறகு சில நாட்களுக்குப் பின் பெட்டைக் கோழி பெரிய வெண்ணிறமான முட்டைகளை இடும், அவற்றின் மேல் உட்கார்ந்து அடை காக்கும், மூன்றுவாரங்கள் சென்றதும் முட்டைகள் வெடித்து குஞ்சுகள் வரும். இதே மாதிரியில்தான் சகல பட்சிகளிலும் பெண் முட்டையுடன் ஆண் தாது சேர்ந்துதான் முட்டைகளும் உண்டாகின்றன. ஆண் தாது சேரா விட்டால் பெண் முட்டைகள் பலன் பெறுமல் அழிந்து போகும். அதனல்தான் பெட்டைக் கோழி வளர்ப்பவர்கள் ஒரு சேவலையும் கூடவே வளர்ப்பார்கள். சேவல் இல்லையானல் பெட்டைக் கோழிகளின் வயிற்றிலுள்ள சிறு முட்டைகள் பெரிய முட்டைகள் ஆகாமல் அழிந்து போய்க் கொண்டேயிருக்கும். கோழிவளர்ப்பவர்களுக்கு முட்டைகள் கிடைக்க மாட்டா.


கோழிமுட்டைக்குள் குஞ்சு உண்டாகும் முறை.



1. இரண்டு நாள் 2. ஐந்து நாள்

3. பத்து நாள் 4. பதினைந்து நாள்

5. இருபது நாள்



கோழிக்குஞ்சு சிறிது சிறிதாக முட்டையை உடைத்துக் கொண்டு வெளியே வருகிறது.

பாப்பா:—அப்பா! அப்படியானால் மிருகங்கள் குட்டி போடுகின்றனவே, அவைகளுக்கும் ஆண் தாது பெண் முட்டையுடன் சேரத்தான் வேண்டுமோ?

அப்பா:—ஆம், அம்மா! அவைகளுக்கும் அப்படித்தான் அம்மா! சில வேளைகளில் காளை மாடுகள் பசுக்களின் மேல் முன்கால்களைத் தூக்கிப் போடுவதைப் பார்த்திருக்கிறாயா?

பாப்பா:—ஆமாம், அப்பா! அப்பொழுது அவைகளைப் பார்க்க எனக்கு அதிகபயமாயிருக்கும். காளைமாடு எவ்வளவு பெரியது, அது கால்களைத் தூக்கிப் பசுவின் முதுகின்மேல் போட்டால் பயமாயிராதா, அப்பா?

அப்பா:—ஆம், அம்மா! பயமாகத்தான் இருக்கும். அவைகள் அருகில் நீ போகக் கூடாது அம்மா! அப்படிக் காளை மாடு பசுவின் மேலே காலைத் தூக்கிப் போடுவதும் தன்னிடமுள்ள ஆண் தாதுவைப் பசுவின் முட்டைப் பையிலுள்ள சின்னஞ் சிறுமுட்டைகளுடன் சேரும்படி செய்வதற்காகவே.

பாப்பா :—அப்பா, அது எப்படிச் சேர்க்கும்? சேவற் கோழிக்கும் பெட்டைக் கோழிக்கும் வாலுக்கடியில் சிறு துவாரங்கள் இருப்பதாகச் சொன்னாயே, அதுமாதிரி காளை மாட்டுக்கும் பசு மாட்டுக்கும் இருக்கிறதோ அப்பா!

அப்பா :—அம்மா! பசு மாட்டின் வாலினடியில் இரண்டு துவாரங்கள் இருக்கின்றன. ஒன்று சாணமிடுந் துவாரம்; மற்றொன்றின் வழியாகத்தான் மூத்திரம் பெய்யும். ஆனால், அந்தத் துவாரத்தின் அருகிலேயே வேறு ஒரு துவாரம் உண்டு. காளை மாட்டின் வாலடியில் சாணத் துவாரந்தான் உண்டு. ஆனால், அடிவயிற்றில் பின் கால்களின் பக்கத்தில் ஒரு சிறு குழாய் இருக்கிறது. காளை மாடு பசு மாட்டின்மேலே காலைப் போடும்பொழுது இந்தக் குழாய் பசு மாட்டின் மூத்திரத் துவாரத்தின் பக்கத்திலுள்ள துவாரத்தில் புகுந்துவிடும். அப்பொழுது காளை மாட்டின் அடிவயிற்றில் தொங்கும் பீஜங்களிலிருந்து ஆண் தாதுவானது அந்தக் குழாய் வழியாகப் பசுவின்

உடம்பில் சென்று அங்குள்ள சிறு முட்டையுடன் சேர்ந்து விடும். அப்புறம் அந்த முட்டை கர்ப்பப் பைக்கு வந்து அங்கு தங்கி கன்றுக் குட்டியாக வளரும். இதே மாதிரிதான் எல்லா மிருகங்களிலும் ஆண் தாது பெண் முட்டையுடன் சேர்ந்து அதைக் குட்டியாக வளரும்படி செய்கிறது. அப்படி ஆண் தாது பெண்முட்டையுடன் சேராவிட்டால் பெண் முட்டையானது குட்டியாகாமல் அழிந்து போகும் .

பாப்பா :—அப்பா! மனிதர்கள் விஷயமும் இதே மாதிரித்தானே?

அப்பா :—ஆம், அம்மா, அதே மாதிரித்தான், சந்தேகமில்லை. ஆனால் ஒரு சிறு வித்தியாசம் மட்டுமே உண்டு அப்பாவிடமுள்ள ஆண் தாது அப்பாவினுடைய பீஜத்திலேயே உண்டாகின்றது, அந்தத் தாது அப்பாவின் மூத்திரக் குழாய் வழியாகவே அம்மாவுடைய மூத்திரத் தோடு உள்ள ஒரு குழாய்க்குள் போய்ச் சேர்ந்து அம்மாவின் முட்டைப் பையிலிருந்துவரும் சிறு முட்டையுடன் கலந்து பின் கர்ப்பப் பையில் தங்கிக் குழந்தை ஆகின்றது. இப்படி ஆண் தாதுவும் பெண் முட்டையும் சேர்வதற்கு அம்மாவும் அப்பாவும் ஒருவரைப் பார்த்து ஒருவர் படுத்துக் கொண்டால் போதுமானது, இது ஒன்று தான் வித்தியாசம். இப்படி ஆண் தாது பெண் முட்டையுடன் சேர்ந்துதான் அம்மா வயிற்றுக்குள் நீயும் உண்டானாய், தங்கச்சியும் உண்டானாள்.

பாப்பா :—அப்படியானால் ஏன் அப்பா! அடிக்கடி ஆண் தாது பெண் முட்டை யுடன் சேரக்கூடாது. அடிக்கடி சேர்ந்தால் அடிக்கடி தங்கச்சி பிறந்துகொண்டிருப்பாள் அல்லவா! அப்பொழுது எனக்கு எத்தனை சின்னத் தங்கச்சிகள் இருப்பார்கள், எவ்வளவு சந்தோஷமா யிருக்கும்!

அப்பா :—ஆம் அம்மா! ஒவ்வொரு பூவிலும் ஆண் தாதாகிய மகரந்தப்பொடி சூல் வயிற்றிலுள்ள பெண் முட்டையுடன் சேருமாகில் நமக்கு ஏராளமான காய்களும் கனிகளும் கிடைக்கும். ஆனால் எல்லாப் பூக்களிலும் மகரந்தம் கிலாக்ரகத்தில் விழாமற் போய்விடுவதுண்டு;

அத்துடன் எத்தனையோ பூக்கள் நன்றாக விளையாத பூக்களாகவும் அதனால் அதிலுள்ள மகரந்தமும் முட்டையும் இரண்டும் சேர்ந்து விதையாகக் கூடியபடி பக்குவமடையாதவையாயும் இருக்கும்; இரண்டும் பக்குவ மடைந்து சேர்ந்தாலும் செடிக்கு நோய் வந்து அவற்றை அழித்து விடலாம், அல்லது பூச்சிகள் முதலியன வந்து கெடுத்து விடவும் செய்யலாம். இப்படிப் பல காரணங்களால்தான் அநேக பூக்கள் காய் உண்டாகாமல் வீணாக உதிர்ந்து போகின்றன.

அதேபோல் மீன் இடும் முட்டைகளிலும் ஆண் மீன் இடும் தாதுநீர் படியாமலும்போகும். படிந்தாலும் சரியான அளவு படியாமலும் இருக்கலாம், சரியான அளவு படிந்தாலும் வேறு பூச்சிகள் வந்து அவற்றை அழிக்கவோ அல்லது வெள்ளம் வந்து அவற்றை அடித்துக் கொண்டு போகவோ செய்யலாம். ஆதலால் மீன் முட்டைகளும் எல்லாம் பருவமடைந்து மீன் குஞ்சுகள் ஆகாமற்போகும்.

பாப்பா:—அப்பா! இந்தக் கஷ்டங்கள் பறவைகளுக்குக் கிடையாதல்லவா? அவைகள் ஏராளமாக உண்டாகலாம் அல்லவா?

அப்பா:—அம்மா! நீ சொல்கிறபடி மீன்களுக்கும் செடிகளுக்கும் உள்ள கஷ்டங்கள் பறவைகளுக்குக் கிடையாதுதான் ஆனால் பறவைகளுக்கும் கஷ்டங்கள் இல்லாமல் இல்லை. ஆண் தாது அரை குறையாக விளைந்திருக்கலாம்; அல்லது பெண் பறவை முட்டையிடுவதற்கு வேண்டிய கூடு கிடையாமற் போகலாம்; அல்லது கூட்டில் பாம்பு முதலியன வந்து முட்டைகளைத் தின்று விடலாம்; அல்லது புயல் காற்று அடித்து கூட்டைப் பிய்த்து எறிந்து விடலாம்.

பாப்பா: அப்படியானால் மிருகங்கட்கும் மனிதர்க்கும் இவ்விதமான இடையூறுகள் ஒன்றும் கிடையாது என்று எண்ணுகிறேன். என்ன அப்பா! அப்படித்தானே!

அப்பா:—ஆம், அம்மா! இந்தவிதமான இடையூறுகள் இருக்காமலிருப்பதற்காகவே செடிக்கும், மீனுக்கும் பறவைக்கும் முட்டையானது பாதி வயிற்றிலும் பாதி வெளியிலும் விளையும்படியாக அமைக்கப்பட்டிருப்பது போல மிருகத்துக்கும் மனிதனுக்கும் அமைக்கப்படவில்லை. மிருகத்துக்கும் மனிதனுக்கும் முட்டையானது முழுவதும் வயிற்றிலேயே விளைகின்றது.

பாப்பா:—அப்படியானால் ஏன் அப்பா அடிக்கடி ஆண் தாது பெண் தாதுடன் சேர்ந்து மிருகங்களுக்குக் குட்டிகளும், மனிதர்க்குக் குழந்தைகளும் உண்டாகவில்லை? அப்படியானால் நம்முடைய பசுவுக்கு எத்தனை கன்றுக் குட்டிகள் பிறக்கும், என்னுடைய பூனை எத்தனை குட்டிகள் போடும், அம்மாவுக்கு எத்தனை தங்கச்சிகள் பிறப்பார்கள்.

அப்பா:—ஆமாம் அம்மா! அப்படிக் கிடைக்கத்தான் செய்யும். ஆனால் ஆண் தாது பெண் தாது வயிற்றுக்குள் அது பெண் முட்டையுடன் சேர்ந்துவிடும் என்று நிச்சயம் சொல்வதற்கில்லை. அண்ணன் மாமரத்திலுள்ள மாங்காயைக் குறிபார்த்துக் கல்லை எறிகிறான். ஆனால் எறியும் பொழுதெல்லாம் மாங்காய் விழுகிறதா இல்லையே. சில வேளைகளில் தானே விழுகிறது. கல்லானது மாங்காய்க்கு நேராகச் சென்றால் மட்டுந் தானே மாங்காய் கீழே விழும். அதுபோல்தான் ஆண் தாதுவும் சில வேளைகளில்தான் பெண் முட்டைக்கு நேராகச் செல்கிறது, அப்பொழுதான் அத்துடன் சேர்கிறது அப்படிச் சேர்ந்து குட்டியோ குழந்தையோ உண்டாக ஆரம்பிக்கிறது. அப்படி நேராகச் செல்வதும் சேர்வதும் எப்போதும் நிகழ்வதில்லை. சில வேளைகளில்தான் நேரும். அடிக்கடி குழந்தைகள் உண்டாகாததற்கு அது ஒரு காரணம். ஆண் தாது பலமில்லாமல் இருக்கலாம், அதுபோலவே பெண் முட்டையும் சரியான வளர்ச்சி பெறாமலிருக்கலாம். சில சமயங்களில் அம்மா அப்பா இருவரின் பழக்க வழங்கங்களும் அவைகளை ஒன்று சேரவிடாமற் செய்யலாம். அது மட்டுமன்று ஆண் தாதுவும்


பெண் முட்டையும் ஒன்று சேர்ந்து கர்ப்பப் பையில் தங்கி குழந்தையாக பூரணமாக வளர்ந்து வெளியே வந்து பிறக்கும் வரையிலும் வேறு ஆண் தாதுவும் பெண் முட்டையும் சேர்ந்தால் அவை குழந்தையாக வளர வேறு இடம் கிடையாததலால் அவைகள் சேரா. இப்படி ஆண் தாதுவும் பெண் முட்டையும் அடிக்கடி சேர்ந்து குழந்தை உண்டாகாமலிருப்பதற்கு அநேக காரணங்கள் உண்டு.

பாப்பா:—ஆனால் அப்பா! இப்படி யில்லாமல் அடிக்கடி ஆண் தாதுவும் பெண் முட்டையும் சேர்ந்து குழந்தைகள் உண்டானால் நல்லதல்லவா? அப்படியானால் அம்மாவுக்கு அநேக தங்கச்சிகளும் தம்பிகளும் பிறப்பார்கள். அவர் களுடன் எல்லாம் விளையாடலாம் அல்லவா? அதிக சந்தோஷமா யிருக்குமல்லவா?

அப்பா :—ஆம், அம்மா! அதிக சந்தோஷமாகத் தானிருக்கும். ஆனால் அப்படி அம்மா வயிற்றில் அடிக்கடி குழந்தைகள் உண்டாவதானால் அம்மாவுக்கு நிரம்பக் கஷ்டம் அம்மா!


பாப்பா:—ஆம் அப்பா! தங்கச்சி வயிற்றிலிருக்கும் பொழுது அம்மா அடிக்கடி வாந்தி பண்ணுவாள். வேலை செய்யவும் நடக்கவும் கஷ்டமாயிருக்கிறது என்று சொல்லுவாள்.

அப்பா:—ஆம் அம்மா! ஆண் தாதுவும் பெண் முட்டையும் முதலில் சேரும்பொழுது பெண்தாது நான்



முன்னால் கூறியபடி ஒரு புள்ளி மாதிரிதானிருக்கும், ஆண் தாதுவும் கண்ணுக்குத் தெரியாததாகத்தான் இருக்கும். அவை இரண்டும் சேர்ந்து கர்ப்பப்பைக்கு வந்து அதில் ஒட்டிக் கொண்டு வளர ஆரம்பிக்கும்பொழுது அது மிகமிகச் சிறியதாகவே இருக்கும். அப்பொழுது அம்மாவுக்குக் கொஞ்சங் கூடச் சிரமமாயிராது. அது பின்னால் வளரும் பொழுது வரவரக் கஷ்டமாக இருக்கும்.





பாப்பா:--அப்பா! ஆண் தாதுவும் பெண்முட்டையும் சேர்வது எப்படி அப்பா! அதைச் சொல்லு.

அப்பா:--அம்மாவும் அப்பாவும் நேருக்கு நேராகப் படுத்து அப்பாவின் ஆண் தாது அம்மாவின் உள்ளே போகும் பொழுது அந்தத் தாது மெல்லிதான இளநீர் வழுக்கை போலிருக்கும். அதில் ஆயிரக்கணக்கான கண்ணுக்குத் தெரியாத சிறிய உயிர்கள் கூடியிருக்கும். பூதக் கண்ணுடியில் பார்த்தால் அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு கடினமான தலையும் ஒரு நீண்ட வாலும் இருப்பதைக் காணலாம்.


பாப்பா :--அப்பா! அதற்கு வால் எதற்கு?

அப்பா :---அம்மா! அந்த உயிர் அந்த வாலைச் சதா ஆட்டிக் கொண்டே யிருக்கும் நாம் நடக்கும் பொழுது கைகளை வீசிக் கொண்டுதான் நடக்க முடியும், அதைக் கவனித்திருக்கிருயா? அதே போல் அந்த உயிர் அம்மாவின் மூத்திரத்துாரவத்துக்கு அருகேயுள்ள துவாரத்தில் போய்ச் சேர்ந்ததும், அங்கிருந்து கர்ப்பப்பை வாசலுக்குள் நுழைந்துபோய், பிறகு அதினின்று பிரியும் குழாயில் செல்லவேண்டும். அங்கேதான் அம்மாவின் முட்டைப் பையிலிருந்து முதிர்ந்த முட்டை ஒன்று,

வந்திருக்கும். அத்துடன் சேர்ந்தால்தான் குழந்தை உண்டாகும். ஆதலால் அந்த ஆண் தாதுவிலுள்ள சிறிய உயிர் தன்னுடைய வாலை ஆட்டி ஆட்டி அதனுதவியால் கர்ப்பப் பைக்குள்ளும் அந்தக் குழாய்க்குள்ளும் செல்லும். அதற்காகத்தான் அது இடைவிடாமல் வாலை ஆட்டிக் கொண்டே யிருக்கும்.

பாப்பா:—அந்த உயிர் பெண் முட்டை வந்திருக்கும் குழாய்க்குப் போனபின் என்ன செய்யும், அப்பா?

அப்பா: ஆண் தாதுவில் ஆயிரக்கணக்கான உயிர்கள் இருக்கும் என்று சொன்னேன் அல்லவா? ஆனால்



அவை எல்லாம் உள்ளே போய்விடும் என்று எண்ணாதே. ஆனாலும் அநேக உயிர்கள் உள்ளே சென்று அந்த முட்டையை நோக்கிப் பாயும். அப்பொழுதும் அந்த உயிர்கள் முட்டைக்குள் பாய்ந்துவிடும் என்று சொல்ல முடியாது. ஒன்று கூடப் பாய முடியாமற் போகலாம், அப்படியானால் அவைகள்எல்லாம்இறந்துவந்தவழியேவெளியேபோய்விடும். அப்படிக்கின்றி ஏதேனும் ஒருஉயிர் அந்த முட்டைக்குள் பாய்ந்துவிடுமானால் அதைத் தன் தலையால் கிழித்துக் கொண்டு உள்ளேபுகும். அப்போது அதன் தலை மட்டும் முட்டைக்குள் செல்லும், வால் வெளியே அறுபட்டுப் போகும். தலை உள்ளே வந்ததும் முட்டை மறுபடியும் மூடிக்கொள்ளும். அதன் பின் வேறு உயிர்கள் அதனுள்ளே போக முடியாது. எல்லாம் இறந்து போகும். அப்படி ஆண் தாதுவும் பெண் முட்டையும் சேர்ந்த பிறகு அதுமெள்ள மெள்ள கர்ப்பப் பைக்கு வரும். அங்கே வந்து ஒட்டிக் கொள்ளும். அதைத்

தான் கர்ப்பம் தரிப்பது அல்லது சூல் கொள்வது என்று கூறுவார்கள்.

பாப்பா:—அப்புறம் அது என்ன செய்யும், அப்பா!

அப்பா:—அப்புறம் அது கொஞ்சம் கொஞ்சமாக வளரும்.

பாப்பா:—அப்பா! அது எப்படி வளரும், அதற்குப் பால் வேண்டாமா? ஜலம் வேண்டாமா? இப்பொழுது தங்கச்சிக்கு அம்மா பாலும் கொடுக்கிறுள், ஜலமும் கொடுக்கிறுள் அல்லவா?

அப்பா:—ஆம் அம்மா! பூவிலுள்ள முட்டைகள் விதைகளாக வளர்வதற்கும் பிறகு விதைகள் மண்ணில் முளைத்து வளர்வதற்கும் உரமும் ஜலமும் வேண்டும். அதேபோல் அம்மாவின் கர்ப்பப்பையிலுள்ள முட்டை வளர்வதற்கும் உணவும் வேண்டும், ஜலமும் வேண்டும். ஆனால் தங்கச்சிக்கு இப்பொழுது கொடுப்பது போல கர்ப்பப் பைக்குள் இருக்கும் பொழுது கொடுக்க முடியுமா?

பாப்பா:—ஆம் அப்பா! முடியாது. அப்படியானல் குழந்தை உள்ளே வளர்வது எப்படி?

அப்பா:—அம்மாவுக்கு பால் எப்படி வருகிறது தெரியுமா?அம்மாவுடைய ரத்தம்தான் பாலாக வருகிறது.

பாப்பா:—அது எப்படி அப்பா! ரத்தம் சிவப்பா யிருக்கும். ஆனல் தங்கச்சி குடிக்கும் பால் வெள்ளையாக அல்லவா யிருக்கிறது. அப்படியிருக்க ரத்தந்தான் பால் என்று எப்படிச் சொல்ல முடியும்?

அப்பா :—அம்மா! ரத்தம் சிவப்புத்தான், பால் வெள்ளைதான். ஆனாலும் ரத்தம் தான் பால். பசுமாட்டி லிருந்து கறக்கிறோமே அந்தப்பாலும் அதன் ரத்தம்தான். எப்படிச் சிவப்பு ரத்தம் வெள்ளைப்பால் ஆயிற்று என்பதும் ஒரு அற்புதம்தான்.

பாப்பா:—அதனுலே தங்கச்சி அம்மா வயிற்றில் இருந்தபொழுது அம்மா அதற்குப் பால் கொடுக்க வில்லே, தன்னுடைய ரத்தத்தையே கொடுத்தாள் என்று சொல்லுகிருயா, அப்பா!

அப்பா :—ஆம் அம்மா! அம்மாவினுடைய ரத்தம்தான் தங்கச்சி கருவா யிருந்தபோது அதை நாளுக்குநாள் பெரிதாக வளர்த்து வந்தது.

அம்மா:—தங்கச்சிக்காக இப்போது என்ன என்ன காரியங்கள் செய்கிருள் உனக்குத் தெரியுமே. ஆனல் அம்மா அவளுக்காக இப்போதுதான் சிரமப்படுகிருள் என்று எண்ணுதே. தங்கச்சி அம்மா வயிற்றுக்குள் இருந்த காலத்திலும் அவளுக்காக அம்மா எவ்வளவோ கஷ்டப்பட்டாள். பார். தன்னுடைய ரத்தத்தைக்கூட அவளுக்குக் கொடுத்து அவளே வளர்த்து வந்தாள்.

பாப்பா :—அப்பா! இப்படித் தங்கச்சி அம்மா வயிற்றுக்குள் எத்தனே மாதம் இருந்தாள்?


அப்பா:—அப்படிப்பத்து மாதங்கள் இருந்தாள் அம்மா!

பாப்பா:—அப்பா! தங்கச்சி பத்து மாதங்கள் அம்மா வயிற்றுக்குள் இருந்ததாகச் சொல்லுகிருயே, அப்படியே தான் ஆடுமாடு முதலிய எல்லா மிருகங்களும் அவற்றின் அம்மா வயிற்றில் பத்து மாதங்கள் இருக்கின்றனவோ?

அப்பா:—அப்படியில்லே அம்மா! சில மிருகங்கள் பத்து மாதங்களுக்குக் குறைவாகவும், சிலமிருகங்கள் பத்து மாதங்களுக்கு அதிகமாகவும் உள்ளே இருந்து வளர்கின்றன.

பாப்பா:—அப்பா! எந்த மிருகங்கள் குறைந்த காலமும் எந்த மிருகங்கள் அதிக காலமும் கர்ப்பப்பையில் இருக்கின்றன?

அப்பா:—அம்மா! சிறிய மிருகங்கள் அதிகக் காலம் இருப்பதில்லே. பெரிய மிருகங்கள் தான் அதிகக் காலமிருக்கின்றன.




கரு தாய்வயிற்றில் வளரும்பொழுது மனிதர்களுடைய கருவும் மிருகங்களுடைய கருவும் ஆரம்ப தசையில் பார்வைக்கு ஒன்று போலவேதான் காணப்படுகின்றன. பிறகுதான் அவை சிறிது சிறிதாக வேற்றுமை அடைந்து கடைசியில் பிறக்கும் பொழுதுதான் இன்ன இன்ன பிராணி என்று தெளிவாகத் தெரிகின்றன.


எலியும் முயலும் ஒரு மாதந்தான். பூனையும் நாயும் இரண்டு மாதங்கள். ஆடு ஐந்து மாதம். கன்றுக்குட்டிக் குத்தான் நம்மைப்போல் பத்து மாதங்கள். குதிரை ஒரு வருஷம். யானை இரண்டு வருஷம்.

பாப்பா:—அப்பா! இதெல்லாம் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. அப்பா! இப்படி வித்தியாசமான காலம் தங்கு கின்றனவே. அப்படியானால் அவைகள் உள்ளே யிருந்து வளர்வதும் வித்தியாசமாகவே இருக்குமோ அப்பா!

அப்பா:—அம்மா! ஆரம்பத்தில் நீயும் தங்கச்சியும் வளர்ந்த மாதிரியேதான் அவைகளும் வளர்கின்றன. அப்பொழுது அவைகளைப் பார்த்தால் எல்லாம் ஒன்று போலவேதான் தோன்றும். ஆனால் நாள் ஆகஆக அவைகள் சிறிது சிறிதாக மாறிக்கொண்டேவரும். கடைசியில், பிறக்கும்பொழுதுதான் இன்ன இன்ன பிராணி என்பது தெளிவாகத் தெரியும்.

பாப்பா :—அதுசரி அப்பா! ஆனால் அங்கே வயிற்றுக் குள்ளே இருப்பது கஷ்டமாக இருக்காதா? **அங்கே** விளையாட முடியாதல்லவா?

அப்பா :—அம்மா! அங்கே தங்கச்சிக்குக் கஷ்டமே கிடையாது. அங்கே அவளுக்கு வெயில் படாது, குளிர் அடிக்காது, அவ்வப்பொழுது ஆகாரம் வந்துகொண் டிருக்கும். தங்கச்சி வளர்ந்து ஆறுமாதம் ஆனபிறகு அவள் அங்கே அப்படியும் இப்படியும் திரும்பி விளையாடவும் செய்வாள். ஆனால் அம்மாவுக்குத்தான் கஷ்டம். ஏதாவது ஒரு வஸ்துவை நாம் நம்முடைய வயிற்றில் சேர்த்துக் கட்டிக் கொண்டால் நமக்கு எவ்வளவு கஷ்ட மாயிருக்கும். கொஞ்ச நேரம் கட்டிக் கொண்டாலுங்கூடக் கஷ்டமாயிருக் கிறதே, அப்படியிருக்கத் தங்கச்சியை இரவும் பகலும் சதா காலமும் அடிவயிற்றில் சுமந்து கொண்டிருப்பது அம்மாவுக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கும் யோசித்துப்பார்.




ஒரு மாதம்



ஒன்றேகால் மாதம்



ஒன்றரை மாதம்



ஒன்றே முக்கால் மாதம்



இரண்டு மாதம்

கரு தாய் வயிற்றில் முதல் இரண்டு மாதங்களில் வெகுவிரைவாக வளர்கின்றது. அது மேற்காட்டிய அளவிலேதான் தாய் வயிற்றில் காணப்படும்.

மூன்று மாதம்





நான்கு மாதம்

மூன்று மாதம் ஆகும் பொழுதுதான் மனிதக்குழந்தையின் உருவம் தோன்றும். மேற்காட்டிய அளவு தாய் வயிற்றில் காணும் அளவில் பாதி.


அது மட்டுமா தங்கச்சிக்குப் பல்லும் எலும்பும் உண்டாக வேண்டுமல்லவா? அதற்கு அம்மாவினுடைய பல்லில் உள்ள சத்து கரைந்து அவளுடைய ரத்தத்துடன் கலந்து தங்கச்சிக்கும் போய் அவளுக்குப் பல்லும் எலும்பும் உண்டாக்குகின்றன. அதனால் அம்மாவுக்கு அந்தச் சமயம் அடிக்கடி பல்வலி கூட உண்டாகும். நீ கூடச் சொல்லவில்லையா, அம்மா அடிக்கடி வாந்தி பண்ணுவாள், சாப்பிட்ட உணவு கூட வயிற்றில் தங்காமல் வந்துவிடும். சில வேளைகளில் கால்கூட வீங்கிவிடும். கடைசி மாதங்களில் நல்ல தூக்கம் வராது. எழுந்திருக்கவும் நடக்கவும் முடியாமலிருக்கும். இப்படி அம்மாவுக்குத் தான் அதிகக் கஷ்டமாயிருக்கும். உன்னுடைய தங்கச்சியிருக்கிறாளே, அவளுக்கு என்ன கஷ்டம், அவள் சுகமாக ஆடி விளையாடிக் கொண்டிருந்தாள்.

பாப்பா:—அப்பா! தங்கச்சி விளையாடிக் கொண்டிருந்ததாகச் சொல்லுகிறாயே, ஆனால் நீ ஆண் தாதுவும் பெண் முட்டையும் சேரும்போது கண்ணுக்குத் தெரியாததாக இருக்கும் என்று சொன்னாயே. அப்படியானால் தங்கச்சி அம்மா வயிற்றுக்குள் விளையாடுவது எப்படி?

அப்பா:—அம்மா! நீ கேட்கிறது சரிதான். ஆனால் ஆண் தாதுவும் பெண் முட்டையும் சேர்ந்து கர்ப்பப்பைக்கு வந்து வளர ஆரம்பித்த காலத்திலேயே உன்னுடைய தங்கச்சி விளையாடக்கூடிய பருவத்தை அடைந்துவிடவில்லை. அவள் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்துதான் பெரியவள் ஆனாள் அம்மா!

பாப்பா:—அப்படியானால் அவள் முதலில் எப்படியிருந்தாள். பிறகு எப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்தாள் என்பதை எல்லாம் எனக்குச் சொல்லு அப்பா!

அப்பா:—அம்மா! ஆரம்பத்தில் கண்ணுக்குத் தெரியாதிருக்கும் கரு, இரண்டு வாரத்தில் ஒரு அரிசி




மூன்றாவது மாதம் ஏழாவதுமாதம் ஒன்பதாவதுமாதம்

கரு தாய் வயிற்றில் வளர்ந்து தலைகீழாக ஆகிக்கொண்டு வருகிறது. கருவின் வளர்ச்சிக்குத் தக்கவாறு தாயின் வயிறும் மார்பும் மாறுதல் அடைந்து கொண்டு வருகின்றன.

எடை கனம் இருக்கும், ஒரு சிறு எறும்பு அளவாகத் தோன்றும். நாலு வாரம் அதாவது ஒரு மாதம் ஆனதும் முக்கியமான உறுப்புகள் தெரியும். 6 வாரமானல் ஆணு பெண்ணு என்று தெரியும். இரண்டு மாதம் ஆகும்பொழுதுதான் இது மனிதக் குழந்தைதான் என்று நிச்சயிக்கலாம். மூன்று மாதங்களானல் 3 இஞ்சு

கருவின் உருவம்





இரண்டு வாரம் ஒரு மாதம் ஒன்றரை மாதம்


இந்தப் படத்திலுள்ள கருவின் அளவு கர்ப்பப் பையிலுள்ள கருவின் அளவைப்போல் இரண்டு மடங்குள்ளது.

நீளமிருக்கும். நாலாவது மாதத்தில்தான் அசைய ஆரம்பிக்கும். ஐந்தாவது மாதத்தில் ஒருச்சாண் நீள மிருக்கும், அது முதல் அதிவிரைவாக வளர்ந்து வருவாள். ஏழு மாதத்தில் பார்த்தால் சின்னப் பூனைக் குட்டி சுருண்டு மடங்கிப் படுத்திருக்குமே அதுபோல் தோன்றும். ஆனல் சதாகாலமும் அசைந்து கொண்டே யிருக்கும். எட்டாவது மாதத்தில் நாம் அம்மா

கர்ப்பப் பையிலுள்ள கருவின் உருவம்



ஒரு மாதம்



இரண்டு மாதம்

வயிற்றின் மீது கைவைத்துப் பார்த்தால் கூட தங்கச்சி விளையாடுவது தெரியும். இப்போது தங்கச்சியைத் தூங்க வைப்பதற்காக அம்மா சில சமயங்களில் மெதுவாகத் தட்டுகிறாள் அல்லவா? அதுபோல் அப்பொழுதும் அவளை மெதுவாகத் தட்டித் தூங்கும்படி செய்யலாம். இப்படிச் சிறுகச்சிறுக வளர்ந்து 10 மாதத்தில் ஆறு ஏழு ராத்தல் நிறையும் இரண்டு சாண் நீளமும் உடையவளாக ஆகி விடுகின்றாள்.

பாப்பா:—அப்புறம் அம்மா வயிற்றிலிருந்து வெளியே வந்து விடுகிறாள். இல்லையா! அப்பா?

அப்பா:—ஆம் அம்மா!

பாப்பா:—ஆனால் அப்பா! அவள் எப்படி வெளியே வந்தாள் அதைச் சொல்லு.


அப்பா:—அம்மா! அம்மாவினுடைய மூத்திரத் துவா ரத்துக்கு அருகில் ஒரு துவாரம் இருக்கிறது என்று சொன் னேன் அல்லவா?

பாப்பா:—ஆம் அப்பா! அது வழியாகத்தான் அப்பா வினுடைய ஆண் தாது அம்மாவினுடைய கர்ப்பப் பைக்குள் போய் அதனருகிலுள்ள குழாயில் வைத்து பெண் முட்டை யோடு சேர்ந்ததாகச் சொன்னாய்.

அப்பா:—ஆம், அம்மா, அது உனக்கு ஞாபகமிருக் கிறதா, அதுதான் நல்லது. அந்த வழியாகத்தான் தங்கச்சி வெளியே வந்தாள்.

பாப்பா:—அப்பா! அது எப்படி முடியும், ஆண் தாது கண்ணுக்குத் தெரியாது, அவ்வளவு சிறியது என்று சொன்னாய். அது அந்த வழியாகச் செல்ல முடியும். ஆனால் தங்கச்சி அப்படிச் சிறியவளா, இல்லையே, அப்படி யிருக்க அவள் எப்படி அந்தத் துவாரத்தின் வழியாக வரமுடியும்?


அப்பா :—ஆம், அம்மா, அது சின்னத் துவாரந்தான். சாதாரண காலத்தில் அந்தத் துவாரத்தில் ஒரு விரல்தான்



மூன்று மாதம்

நான்கு மாதம்


ஐந்து மாதம்



ஆறு மாதம்



ஏழு மாதம்



எட்டு மாதம்

நுழைய முடியும். அதைவிடப் பெரிய வஸ்து எதுவும் நுழைய முடியாது, ஆனால் தங்கச்சி கர்ப்பப் பையில் பத்து மாதம் வளர்ந்து பெரியவளாகி வெளியே வரவேண்டிய பருவம் வந்தவுடன் அந்தத் துவாரமும் கர்ப்பப்பை வாசலும் பெரியதாக விரிந்து கொடுக்கும். தங்கச்சி முதலில் கர்ப்பப் பையின் வாசல் வழியாகவும், பிறகு அந்தத் துவாரத்தின் வழியாகவும் மெள்ள மெள்ள வெளியே வருவாள். அப்பொழுது அம்மாவுக்கு அதிகக் கஷ்டமா யிருக்கும். இப்படிக் குழந்தை பிறப்பதைப் பிரசவம் என்றும் அப்பொழுது உண்டாகும் கஷ்டத்தை பிரசவ வேதனை என்றும் கூறுவார்கள்.

பாப்பா :—அப்பா! என்னைப் பெறும்பொழுதும் இப்படித்தான் அம்மா கஷ்டப்பட்டாளோ? அப்பொழுது அம்மாவுக்கு எவ்வளவு துன்பம் உண்டாயிருக்கும்!

அப்பா :—ஆம் அம்மா! இப்படித்தான் அம்மா உன்னைப் பெறும் பொழுதும் கஷ்டப்பட்டாள். எல்லாப்பெண்களும் பிரசவ காலத்தில் இப்படித்தான் வேதனை யடைகிறார்கள். ஆனாலும் குழந்தை பெறுவதற்காக அவர்கள் அவ்வளவு கஷ்டத்தையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

பாப்பா :—அப்பா! குழந்தை பிறந்த பிறகு என்ன செய்வார்கள்?

அப்பா:—குழந்தை பிறந்த பிறகு அதைக் குளிப் பாட்டித் தூங்க வைப்பார்கள். கொஞ்ச நேரம் கழித்து அம்மாவிடம் பால் குடிக்க வைப்பார்கள். அது கொஞ்சம் குடித்துவிட்டு மறுபடியும் தூங்கும்.

பாப்பா:—அப்பா! தங்கச்சியைக் குளிப்பாட்டிக் கொண்டு வந்தவுடன் பார்த்தேன். அவளுடைய கொப் பூழில் துணி வைத்துக் கட்டியிருந்ததே, ஏன் அப்பா?

அப்பா:—அம்மா, அதுவா? தங்கச்சி அம்மா வயிற்றிலிருந்தபொழுது அம்மாவுடைய ரத்தம்தான்

அவளை வளர்த்து வந்தது என்று கூறினேனே, ஞாபக மிருக்கிறதா?

பாப்பா:—ஆமாம் அப்பா! அதற்கும் கொப்பூழுக்கும் என்ன சம்பந்தம் அப்பா?

அப்பா:--அம்மா! தங்கச்சிக்கு ரத்தம் எப்படிப் போயிற்று என்று சொல்லு பார்ப்போம்.

பாப்பா:--அது எப்படிப் போயிற்று 'அப்பா? தங்கச்சி வேறு, அம்மா வேறுதானே. எப்படி அம்மாவின் ரத்தம் தங்கச்சிக்குப் போகும்? தங்கச்சி அம்மாவின் ரத்தத்தைக் குடிக்க முடியுமா அப்பா?

அப்பா:--அம்மா! அது முடியாது. ஆனுல் தங்கச்சி யின் வயிற்றிலும் உன்னுடைய வயிற்றிலும் கொப்பூழ் இருக்கிறதே. அது அம்மா வயிற்றிலிருக்கும்பொழுது இவ்வளவு சிறியதாக இராது. கொடிபோல் நீளமாக இருக்கும். அம்மாவின் கர்ப்பப் பையுடன் சேர்ந்திருக் கும், அதன் வழியாகத்தான் தங்கச்சிக்கு அம்மாவின் ரத்தம் போய்க்கொண்டிருந்தது. இப்பொழுது தெரிகிறதா? அம்மா!


பாப்பா :—அப்பா! அது தெரிகிறது. ஆனுல் அதை இப்பொழுது காணேமே அப்பா, அது எங்கே?

அப்பா :—அம்மா! தங்கச்சி பிறந்ததும் அதை டாக்டர் கத்திரித்துவிட்டு மருந்துபோட்டுக் கட்டிவிடுவார்.


பாப்பா :—அப்பா! இது என்ன அனியாயம். அப்படிச் செய்தால் தங்கச்சிக்கு வலிக்காதா?

அப்பா :—கத்திரிக்கும்பொழுது வலிக்கத்தான் செய் யும். ஆனுல் மருந்து போட்டால் பிறகு வலிக்காது.

பாப்பா :—அப்பா! அதை ஏன் கத்திரிக்கிருர்கள்? அது தங்கச்சிக்கு வேண்டாமா?



ஒன்பதாவது மாதம்



குழந்தை பிறக்கப்போகும் சமயம்


அப்பா:—அது இனிமேல் அவளுக்கு எதற்கு? அவள் **தான்** வாயினால் அம்மாவிடம் பால் குடிக்கலாமே என்ன அம்மா?

பாப்பா: —ஆம் அப்பா, ஆனால் நம்முடைய பசு கன்று போட்டபொழுது அதற்கும் கொப்பூழ் இருந்திருக்கும் அல்லவா?

கர்ப்பப்பையில் குழந்தை பிறக்கும் நிலையில் இருக்கிறது.




அப்பா :—ஆம் அம்மா, பால் கொடுக்கும் மிருகங்களின் குட்டிகளுக்கெல்லாம் கொப்பூழ்க் கொடி உண்டு.



குழந்தையின் தலை வெளியே
வந்துவிட்ட சமயம்



குழந்தையின் தலை வெளியே
வரும் சமயம்

பாப்பா :—அப்படியானால் அந்தக் குட்டிகளின் கொடியை யார் அறுக்கிறார்கள்? அவைகளுக்கு டாக்டர் ஏது அப்பா?

அப்பா :—அம்மா, அவைகளுக்கு டாக்டர் கிடையாது. அவைகளே தான் டாக்டர். குட்டி போட்டதும் தாய் இருக்கிறதே, அதுவே குட்டியின் கொப்பூழ்க் கொடியைக் கடித்துத் தின்றுவிடும்.

பாப்பா :--அது என்ன அப்பா ஆச்சரியமாயிருக்கிறதே.

அப்பா :--ஆம், அம்மா! அப்படித்தான். அதனால் அவைகளுக்குக் கெடுதல் ஒன்றுமில்லை.

பாப்பா:--அப்பா, அது சரி. ஆனால் ஒரு சமயத்தில் ஒரு தங்கச்சிதான் பிறக்க முடியுமோ? இரண்டு மூன்று தங்கச்சிகள் பிறக்கக் கூடாதோ?

அப்பா:--அம்மா, சாதாரணமாக ஒரு சமயத்தில் ஒரு குழந்தைதான் பிறக்கும். அபூர்வமாகத்தான் இரண்டு குழந்தைகள் பிறக்கும்.

பாப்பா:--அது ஏன் அப்பா அப்படி?

அப்பா:--அம்மா, ஆண் தாது உயிரைப்பற்றிச் சொன்னேனே, ஞாபகமிருக்கிறதா?

பாப்பா:--ஆம், அப்பா! அதுதானே அம்மாவின் கர்ப்பப்பை வழியாகச் சென்று அம்மாவின் முட்டைப் பையிலிருந்து வரும் முட்டையுடன் கலந்து குழந்தை உண்டாக்குகிறது என்று சொன்னாய்?

அப்பா:--ஆம், அம்மா! ஒரு ஆண் தாது உயிர்தான் பெண் முட்டைக்குள் போகும். அது போனவுடன் பெண் முட்டை மூடிக்கொள்ளும், மற்ற ஆண் உயிர்கள் எல்லாம் இறந்து போகும் என்று சொன்னேன் அல்லவா?

பாப்பா:--ஆம், அப்பா! அப்படி ஒரு ஆண் உயிர் உள்ளே போனால் ஒரு குழந்தைதான் உண்டாகுமோ?

அப்பா:--ஆம் அம்மா, ஒரு குழந்தைதான் உண்டாகும்.

பாப்பா:--அப்படியானால் ஏன் ஒரு ஆண் உயிர் மட்டும் உள்ளே போக வேண்டும். இரண்டு மூன்று போனால் என்ன?

அப்பா:—அம்மா! நீ கோழி முட்டை பார்த்திருக்கிறாயா?

பாப்பா:—ஆமாம் அப்பா, அது வெள்ளையாகப் பளபள வென்றிருக்கிறது.

அப்பா:--அம்மா, அதை உடைத்தால் அதில் வெள்ளையாக வழவழ என்று இருக்கிறது. அத்துடன் மஞ்சள் நிறமாக ஏதோ உருண்டை மாதிரி ஒன்று தோன்றுகிறது.

அப்பா:—ஆமாம், அதைத்தான் மஞ்சள்க் கரு என்று கூறுவார்கள். அதுதான் குஞ்சாக வளர்கிறது.

பாப்பா:--அப்படியானால் வெள்ளையாக இருக்கிறதே, அது எதற்கு அப்பா?

அப்பா:--அம்மா! மஞ்சள்க் கரு குஞ்சாக வளரும் பொழுது அதற்கு ஆகாரம் வேண்டாமா? தங்கச்சி அம்மா வயிற்றுக்குள் இருப்பதால் அவளுக்கு அம்மாவின் ரத்தம் கிடைக்கிறது. ஆனால் முட்டை வெளியில் இருப்பதால் அதற்குப் பெட்டை கோழியின் ரத்தம் கிடைக்க முடியுமா?

பாப்பா:--கிடைக்க முடியாது. அதற்காகத்தான் அந்த வெள்ளைக் கருவோ? அதுதான் முட்டைக்குள் உண்டாகும் குஞ்சுக்கு ஆகாரமோ அப்பா?

அப்பா:--ஆம் அம்மா! முட்டைக்குள்ளிருக்கும் மஞ்சள்க் கருத்தான் குஞ்சாகிறது என்று சொன்னேன் அல்லவா? அதேமாதிரிதான் அம்மா வயிற்றில் உண்டாகும் முட்டையிலும் இரண்டு கரு உண்டு. ஒன்று குழந்தையாகும், ஒன்று அது கர்ப்பப்பைக்கு வந்து சேரும் வரை அதற்கு ஆகாரமாயிருக்கும்.

பப்பா :--அப்பா! நான் இதுவா கேட்டேன்? இரண்டு மூன்று ஆண் உயிர்கள் அம்மாவின் முட்டைக்குள் போகக் கூடாதா? போய் இரண்டு மூன்று குழந்தைகளை உண் டாக்கக் கூடாதா என்றல்லவா கேட்டேன்?

அப்பா :--ஆம் அம்மா அதைத்தான் கேட்டாய். அதைத்தான் நானும் சொல்லப்போகிறேன். அம்மா! கேள். அம்மாவினுடைய வயிற்றில் ஒரு சமயத்தில் ஒரு முட்டை விளைந்து பக்குவமாகும் என்று சொன்னது ஞாபகமிருக் கிறதா?

பாப்பா :--ஆம், அப்பா.

அப்பா: --அந்த முட்டையில் குழந்தை உண்டாகும் கருப்பாகம சாதாரணமாக ஒன்றே ஒன்றுதானிருக்கும். ஆனால் சில சமயங்களில் அபூர்வமாக இரண்டு இருந்து விடும். ஒன்றுமட்டுமிருந்தால் அந்த முட்டை ஒரு ஆண் உயிர் உள்ளே வந்ததும் மற்ற உயிர்களுக்கு இடம் கொடாமல் மூடிக் கொள்ளும். ஆனால் இரண்டு கருப் பாகங்கள் இருந்துவிட்டால் அப்பொழுது அது இரண்டு ஆண் உயிர்கள் உள்ளே வருவதற்கு இடங்கொடுக்கும். அந்தச் சமயத்தில்தான் இரண்டு குழந்தைகள் ஒரே சமயத் தில் பிறக்கும்.

பாப்பா: --ஆனால் அப்பா! நாயும் பூனையும் பல குட்டிகள் போடுகின்றனவே!

அப்பா :—ஆம், பூனை 3 முதல் ஆறு குட்டிகளும் நாய் 3 முதல் 8 குட்டிகளும் போடும் அம்மா! அது அவைகளுக்கு இயற்கை. ஆட்டைப் பார், அதுவும் இரண்டு மூன்று குட்டிகள் போடும். பன்றி பார்த்திருக்கிறாயா. அது பத்துப் பன்னிரண்டு குட்டிகள் போடும். ஆனால் பசு, குதிரை, யானை முதலிய பெரிய மிருகங்கள் எல்லாம் ஒரு சமயத்தில் ஒரு குட்டிதான் போடும்.

பாப்பா :—அப்பா! அது தெரிகிறது. ஆனால் அம்மா

பாப்பா :—அப்படியானல் ஆண் பெண் உண்டாவது பெண் முட்டையினல் இல்லை, ஆண் உயிரினல்தான் என்று எண்ணுகிறேன், அப்பா.

அப்பா :—அப்படித்தான் அம்மா. நீ கெட்டிக்காரி. கண்டு பிடித்து விட்டாயே!

பாப்பா :—என்ன அப்பா, ஆண் உயிர்களில்தானே கம்பிகள் வித்தியாசமாக இருப்பதாகச் சொன்னய்?

அப்பா :—ஆம், அம்மா. பெண் முட்டையுடன் பதிஞெரு கம்பிகள் உள்ள ஆண் உயிர் சேர்ந்தால் ஆண் குழந்தை உண்டாகும். பன்னிரண்டு கம்பிகள் உள்ள ஆண் உயிர் சேர்ந்தால் பெண் குழந்தை உண்டாகும்.

பாப்பா :—அப்பா, அது ஏன் அப்படிச் சிலசமயம் பதினென்று உள்ளதும் சில சமயம் பன்னிரண்டு உள்ளதும் சேர்கின்றன?

அப்பா :—அதை ஏன் என்று சொல்ல முடியாது அம்மா! இரண்டுவிதமான உயிர்களும் உள்ளே போகின்றன. அவைகளில் எந்த உயிர் முட்டைக்குள் போகும் என்று முன் கூட்டிச் சொல்வது எப்படி?

பாப்பா :—அப்படியானல் தங்கச்சி பிறப்பதற்கு முன்னல் உனக்கும் அம்மாவுக்கும் பிறக்கப் போவது தங்கச் சியா தம்பியா என்று தெரியாதோ, அப்பா?

அப்பா :—அது எப்படித் தெரிய முடியும்?

பாப்பா :—கர்ப்பம் உண்டாகி ஆறு வாரம் ஆகும் பொழுது ஆண் பெண் என்ற வித்தியாசம் தெரிய ஆரம் பிக்கும் என்று முன்னல் சொன்னயே அப்பா?

அப்பா :—ஆம், அம்மா! அது டாக்டர்கள் இறந்து போன தாய்மார்களின் வயிற்றைப் பரிசோதித்துப் பார்த்து அறிந்துகொண்ட விஷயம். ஆனல் அம்மா வயிற்றுக்குள் இருக்கும்பொழுது அதை அறிய முடியாதம்மா? குழந்தை பிறந்த பிறகுதான் ஆணு பெண்ணு என்று அறிய முடியும்

பாப்பா :--அப்பா! அம்மா வயிற்றில் தங்கச்சி எப்படி உண்டானுள், எப்படி வளர்ந்தாள், எப்படி அம்மா வயிற்றிலிருந்து வெளியே வந்து பிறந்தாள் என்ற அதிசயங் களைச் சொன்னுயே, நானும் அம்மா மாதிரி பெண்தானே; என் வயிற்றிலும் குழந்தை உண்டாகலாமல்லவா?

அப்பா :--ஆம், அம்மா. நீயும் பெண்தான். உன் வயிற்றிலும் குழந்தை உண்டாகலாம். ஆனல் இப்பொழுது உண்டாகாது.

பாப்பா :--அது என்ன அப்பா! நீ சொல்வது ஆச்சரி யமாக இருக்கிறதே! குழந்தை உண்டாகலாம். ஆனல் இப்பொழுது உண்டாகாது என்று சொல்லுகிருயே, கொஞ் சமும் எனக்குத் தெரியவில்லையே, அப்பா!

அப்பா :--அம்மா: உன் வயிற்றிலும் இரண்டு முட்டைப் பைகள் உண்டு. அவற்றில் ஏராளமான முட் டைகளும் உண்டு. ஆனலும் அவைகள் குழந்தைகள் ஆக முடியாது.

பாப்பா :--அது ஏன் அப்பா! நன்ருக விளக்கிச் சொல்லு.

அப்பா :--அம்மா! ஆண் தாது சேர்ந்தால்தானே பெண் முட்டை குழந்தையாக வளர முடியும்?

பாப்பா :--ஆம், அப்பா, அப்படி ஆண் தாது சேர்ந் தால் என்னுடைய வயிற்றிலுள்ள முட்டை குழந்தை யாகாதோ?

அப்பா :--ஆண் தாது சேர்ந்தால் குழந்தை ஆகலாம், ஆனல் ஆண் தாது உன்னுடைய முட்டையுடன் சேர முடியாது, சேர்ந்து குழந்தை ஆக முடியாது.

பாப்பா :--அப்படி ஏன் அப்பா, ஆண் தாது என்னு டைய முட்டையுடன் சேர முடியாது?



அப்பா :--அம்மா! அதற்குக் காரணம் சொல்லுகிறேன், கேள். இந்தப் பூவைப் பார்.

பாப்பா :--அப்பா! அது பூவரசம் பூ, எவ்வளவு அழகாயிருக்கிறது! அதன் மஞ்சள் நிறம் எவ்வளவு பளபளப்பா யிருக்கிறது?

அப்பா :--ஆம், அம்மா! அதை மோந்து பார்.

பாப்பா :--அப்பா! அது ஒருவிதமான நல்ல வாசனையாக இருக்கிறது.

அப்பா :--அம்மா! அதனுள்ளே என்ன இருக்கிறது சொல்லு.



பாப்பா: --அப்பா! நீ முன்னே காட்டிஞயே, அந்த மாதிரி நடுவே கீலமும் அதன் மேலே கேசரங்களும் இருக்கின்றன, மஞ்சள் மஞ்சளாக மகரந்தப் பொடி சிதறிக் கிடக்கிறது. அது கீலத்தின் தலைமீது பட்டதும் உள்ளே நீண்டு சென்று அடியிலுள்ள முட்டையுடன் சேர்ந்து காயும் விதையும் ஆகிறது என்று சொன்ஞய் அல்லவா, அப்பா!

அப்பா :—ஆம், அம்மா! ஆஞல் இதைப்பார், இது என்ன சொல்லு பார்ப்போம்.

பாப்பா :—அப்பா! அது எனக்குத் தெரியும், அது பூவரச மொட்டு.

அப்பா:--அம்மா! இந்த மொட்டு விரிந்துதானே பூவாகிறது? இதன் நிறமும் மணமும் என்ன சொல்லு?

பாப்பா: --ஆம், அப்பா! இந்த மொட்டு விரிந்துதான் பூவாகிறது. ஆனால் இது பூ மாதிரி நல்ல மஞ்சள் நிறமாக இல்லையே, இதில் வாசனையைக் காணோமே, ஏன் அப்பா!

அப்பா:-- அம்மா, பூ விரியும்போதுதான் நல்ல நிறமும் மணமும் உண்டாகும்; அப்பொழுதுதான் பூ வானது பருவம் அடைகின்றது. சரி இப்பொழுது இந்த மொட்டிலுள்ள இதழ்களை மெதுவாக விரித்து உள்ளே என்ன இருக்கிறது பார்.

பாப்பா: --அப்பா! இதோ பார்த்தாயா அப்பா! இந்த மொட்டுக்குள்ளும் கிலமும் கேசரமும் இருக்கின்றன.

அப்பா: --ஆம், அம்மா! அவைகள் மொட்டிலும் உண்டு. ஆனால் அவை விரிந்த பூவில் இருப்பதுபோல் இருக்கின்றனவா?

பாப்பா :--இல்லை அப்பா! அவைகள் சிறியதாகவும் இருகின்றன. மகரந்தப் பொடியையும் காணோம், அது ஏன் அப்பா!

அப்பா :—அம்மா! கேசரங்களின் நுனியில் தடிப்பா யிருக்கிறது பார், அவைதானே மகரந்தப் பைகள். மகரந்தப் பொடி அவைகளுக்குள்ளாக இருக்கும், ஆனால் அது நன்றாக விளையவில்லை. அது விளைந்தால்தானே அந்தப் பைகள் வெடித்து வெளியே வந்து சிந்தும்.

பாப்பா :—அப்படியானால் இந்த மொட்டில் காயும் விதையம் உண்டாகாதோ அப்பா!

அப்பா: —காயும் விதையும் மொட்டில் எப்படி உண் டாகும்? காயும் விதையும் உண்டாக வேண்டுமானால் முதலில் மகரந்தப் பொடி சிந்த வேண்டும். அதன்பின் அது கிலாக்ரகத்தில் பட வேண்டும். அந்தப் பொடி நீண்டு கிலத்தின் ஊடே இறங்கி சூல்வயிற்றிலுள்ள முட்டையுடன் கலக்க வேண்டும். அதெல்லாம் நடந்தால்தானே காயும் விதையும் உண்டாகும் அம்மா!

பாப்பா :—ஆம், அப்பா! அப்படியானுல் நாம் மரத்திலுள்ள ஒரு மொட்டை விரித்து அந்த மரத்தில் விரிந்திருக்கும் ஒரு பூவின் மகரந்தத்தை எடுத்து மொட்டின் கீலாக்ரகத்தின் மீது வைத்தால் காய் உண்டாகலாம் அல்லவா?

அப்பா ;—அப்பொழுதும் உண்டாகாது. நாம் மகரந்தப் பொடியை மொட்டின் கீலாக்ரகத்தின்மீது வைக்கலாம்; ஆனுல் அதை இறுக்கிப் பிடித்துக் கொள்ள அந்த விளையாத கீலாக்ரகத்தில் பசை நீர் உண்டாவதில்லை. அதனுல் நாம் வைக்கும் மகரந்தப் பொடி கீலத்தினூடே இறங்காமல் காற்றில் சிதறிப் போகும்,

பாப்பா :—அப்பா! இப்பொழுது எனக்குத் தெரிகிறது. விரிந்த பூவில் மகரந்தப் பொடி முட்டையுடன் கலந்து காயும் விதையும் உண்டாகிறது. மொட்டிலோ அவை சேர்வதுமில்லை, அதனுல் காய் உண்டாவது மில்லை.

அப்பா :—அம்மா! சேவற் கோழி பெட்டைக் கோழியின் மீது ஏறுவதைப் பார்த்திருக்கிருயே, அதுபோல் ஒரு குஞ்சு மற்றொரு குஞ்சின்மீது ஏறுவதைப் பார்த்திருக்கிருயா?

பாப்பா: —இல்லை, அப்பா! அது ஏன் அப்படி?

அப்பா: —அம்மா! சேவலிடம்தான் ஆண் தாது விளைந்திருக்கும்: சேவற் குஞ்சிடம் விளைந்திராது, அதே மாதிரி பெட்டைக் கோழியிடம்தான் பெண் தாது விளைந்திருக்கும், பெட்டைக் குஞ்சிடம் விளைந்திராது.

பாப்பா: --அதனுல்தான் ஒரு குஞ்சு மற்றொரு குஞ்சின் மீது ஏறுவதில்லையோ, அப்பா!

அப்பா :--ஆம், அம்மா! அதுதான் காரணம். அப்படியே ஒருவேளை ஏறினுலும் அவற்றின் வாலினடியேயுள்ள துவாரங்கள் பொருந்த மாட்டா. பொருந்தினுலும் ஆண் தாது பெட்டைக் கோழியினுள் சென்று பெண் தாதுவுடன் கலந்து முட்டையாகாது,

பாப்பா :--ஆகவே, ஆண் தாதுவும் பெண் தாதுவும் விளைந்தால்தான் ஒன்ருகச் சேர முடியுமோ?

அப்பா: --ஆம், அம்மா! அந்த மாதிரியேதான் சிறுவர்களிடத்தில் ஆண் தாதுவும் சிறுமிகளிடத்தில் பெண் தாதுவும் விளைந்து பருவமடையாமல் இருக்கின்றன. அதே மாதிரிதான் ஆண் தாதுவை பெண்ணின் உடம்பில் சேர்க்கும் உறுப்பும் அப்படிச் சேர்க்கும் ஆண் தாதுவை வாங்கிப் பெண் தாதுவுள்ள இடத்துக்கு அனுப்பும் பெண் உறுப்பும் வளர்ந்து பருவம் அடையாமல் இருக்கின்றன. இந்தக் காரணத்தால்தான் அம்மா! உன்னுடைய உடம்பில் பெண் தாது இருந்தாலும் ஆண் தாதுவோடு சேர்ந்து குழந்தை உண்டாகாது என்று சொன்னேன்.

பாப்பா; --அப்படியாஞல் ஆண் தாதுவும் பெண் தாதுவும் எப்பொழுதுதான் பருவமடையும் அப்பா!

அப்பா: --சிறுவர்களாயும் சிறுமிகளாயும் இருக்கும் பொழுது ஆண் தாதுவும் பெண் தாதுவும் கொஞ்சங் கொஞ்சமாக விளைந்துகொண்டே இருக்கும். ஆண் தாது ஆணுக்கு 16-20 வயதாகும்பொழுதும் பெண் தாது பெண்ணுக்கு 13-14 வயதாகும்பொழுதுமே பருவம் அடையும்.

பாப்பா: --அப்பா! அதற்குப் பிறகுதான் ஆண் தாதுவும் பெண் தாதுவும் சேர முடியுமோ? அப்பொழுது தான் குழந்தை உண்டாகுமோ?

அப்பா :--ஆம், அம்மா! ஆஞல் பூவரசமரத்தில் எத்தனையோ பூக்கள் பூக்கின்றனவே, அவைகளில் எல்லாம் காய் உண்டாகிறதா?

பாப்பா :--இல்லை, அப்பா! அநேக பூக்கள் காயாமலே உதிர்ந்து விடுகின்றன. அதற்குக் காரணம் என்ன அப்பா!

அப்பா: --அம்மா, அந்த மாதிரிப் பூத்தும் காயாகாமல் உதிரும் பூக்களில் மகரந்தப் பொடியும், சூல் முட்டையும்

ஒரு அளவு விளைந்திருந்தாலும், காயாகும்படியான நல்ல வளர்ச்சி அடைவதில்லை. அதனால் தான் அந்த இரண்டும் சேர்ந்து காயும் விதையும் உண்டாவதில்லை. அம்மா, இன்னும் பார்! ஒரே மரத்தில் சில காய்கள் பெரியதாகவும், சில காய்கள் சிறியதாகவும் இருக்கின்றனவே அதற்குக் காரணம் என்ன?

பாப்பா : --அது ஏன் அப்பா!

அப்பா : --அம்மா! சில பூக்களில் மகரந்தப் பொடியும் சூல் முட்டையும் காயாகக் கூடியபடி விளைந்திருந்திருந்தாலும் அவ்வளவு பலமுடையனவாக இருக்கா. அதனால் தான் அந்தப் பூக்களில் உண்டாகும் காய்கள் சிறியனவாக இருக்கின்றன. அவற்றில் சில பெரிதாகு முன்பே உதிர்ந்து போனாலும் போகும்.

பாப்பா: --ஆம். அப்பா! நம்முடைய தோட்டத்திலுள்ள மாமரத்தில் சில பழங்கள் பெரியதாயும் சில பழங்கள் சிறியதாயுமிருக்கின்றன. சில காய்கள் பழுக்காமலே வெம்பி உதிர்ந்து விடுகின்றன. அதற்கெல்லாம் மகரந்தப் பொடியும் சூல் தாதுவும் சரியான வளர்ச்சி பெறாததுதான் காரணமோ, அப்பா!

அப்பா: --ஆம், அம்மா? அதே மாதிரிதான் சிறுவர்கள் எல்லோரிடத்திலும் சரியான வளர்ச்சி யடைந்த ஆண் தாதுவும் பெண் தாதுவும் கிடையா. அதனால்தான் சிலர்க்குக் குழந்தைகள் உண்டாவதேயில்லை. இன்னும் சிலர்க்குக் குழந்தைகள் பிறந்தாலும் அவைகள் சீக்கிரத்தில் இறந்து விடுகின்றன. சில குழந்தைகள் இறவாதிருந்தாலும் சிறியனவாயும் நோயாயும் பலமில்லாமலும் இருக்கும்.

பாப்பா: --அப்படியானால் நல்ல குழந்தைகள் பிறப்பதற்காக ஆண் தாதுவும் பெண் தாதுவும் சரியானபடி வளர்ச்சியடையும்படி செய்வது எப்படி அப்பா!

அப்பா: --அம்மா, அதற்குச் சிறுவர்களும் சிறுமிகளும் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல உள.

பாப்பா: --அவைகள் எவை அப்பா! அவைகளைச் சொல்லு. என்னிடம் நல்ல குழந்தைகள் உண்டாக வேண்டாமா? நான் அவைகளைக் கவனித்து நடப்பேன்.

அப்பா :—ஆம், அம்மா! உன்னிடத்தில் நல்ல ஆரோக்கியமும் பலமும் அழகும் உள்ள குழந்தைகளே பிறக்க வேண்டும். அதுதான் அம்மா! என்னுடைய ஆசை. அதற்காக நீ கவனிக்க வேண்டிய விஷயங்களை ஒவ்வொன்ருகச் சொல்லுகிறேன், கேள். அம்மா! நீ ஆரோக்கியமாயும் பலமாயும் அழகாயும் இருந்தால்தான் உன்னுடைய குழந்தைகளும் ஆரோக்கியமாயும் பலமாயும் அழகாயுமிருக்கும். அப்படி நீ ஆரோக்கியமாயும் பலமாயும் அழகாயுமிருக்க வேண்டுமானால் முதன் முதலாக உன்னுடைய உடம்பில் அதிகமான நல்ல ரத்தம் உண்டாக வேண்டும்.

பப்பா: —அதற்கு என்ன செய்ய வேண்டும் அப்பா!

அப்பா: —அதற்காக நீ சுத்தமானதும் சத்துள்ளதும் சுலபமாக சீரணமாகக் கூடியதுமான உணவை உண்ண வேண்டும். அதனால் நீ பால், மோர், நெய், பருப்பு, பழங்கள், காய்கறிகள், கீரைகள் அதிகமாகச் சாப்பிட வேண்டும்.

பாப்பா: —அப்பா! நீ சொல்லுகிற மாதிரியே அம்மாவும் சொல்லுகிருள். அதனலேயே எங்களுக்கு அதிகமான பாலும் கொடுக்கிருள். ஆனல் பாலும் நெய்யும் எல்லோர்க்கும் கிடைக்குமா? அதற்கு அதிகமான பணம் வேண்டாமா?

அப்பா :—ஆம், அம்மா! நம்முடைய நாட்டில் ஏழைகள்தான் அதிகம். அதனல் அவர்களுடைய குழந்தைகள் அதிகமான பாலும் நெய்யும் சாப்பிட முடியாது. ஆதலால் அப்படிப்பட்ட குழந்தைகள் தினந்தோறும் அதிகமான மோரும், அத்துடன் ஒரு கரண்டி மீன் நெய்யும் இரண்டு விரலால் எடுக்கக் கூடிய கால்ஷியம் லாக்டேட் என்னும் பொடியும் சாப்பிட வேண்டும். இவைகளை இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் வாங்கலாம். பால் அதிக விலையானலும் மோர்க்கு அவ்வளவு அதிக விலையில்லை. பாலிலும்

மோரிலும்தான் கால்ஷியம் என்னும் சத்து அதிகம். அந்தச் சத்தை அதிகமாகச் சாப்பிட்டால்தான் பெண் குழந்தைகளுக்கு கர்ப்பப் பைக்குச் சமீபத்திலுள்ள எலும்புகள் பெரியதாக வளரும். அப்படி வளர்ந்தால்தான் அவர்களுக்குப் பின்னல் குழந்தை பெற எளிதாயிருக்கும்.

பாப்பா :—அப்பா! பழங்கள் சாப்பிடும்படி சொல்லுகிறுயே, எந்தப்பழங்கள் நல்லவை அப்பா!

அப்பா:—அம்மா! எல்லாப் பழங்களும் நல்லவைதான். எந்தக்காலத்தில் எந்தப் பழங்கள் கிடைக்குமோ, அந்தப் பழங்களை யெல்லாம் சாப்பிடலாம். அவைகளில் ஆரஞ்சுப் பழமும் தக்காளிப் பழமும் நிரம்ப நல்லவை என்று டாக்டர்கள் கூறுகிறுர்கள். தக்காளிப் பழத்தைச் சிலர் வேக வைத்துச் சாப்பிடுகிறுர்கள். அது தவறு இந்தப் பழங்கள் எல்லாம் விலை அதிகமானவை, எல்லோராலும் வாங்க முடியாதவை. ஆனுல் நம்முடைய நாட்டில் எல்லாக் காலங்களிலும் எல்லோர்க்கும்சுலபமாகக் கிடைக்கக்கூடியபழங்கள் வாழைப்பழமும் ஒரு எலுமிச்சம்பழமுமேயாகும். நீங்கள் குழந்தைகள் தினந்தோறும் இரண்டு வாழைப்பழமும் ஒரு எலுமிச்சம் பழமும் சாப்பிட்டால் போதும். இந்த இரண்டு பழங்களும் வாங்க முடியாதவர்கள் நெல்லிக்காய் காலத்தில் நிறைய வாங்கி கொட்டைகளை நீக்கிவிட்டுஉலர்த்திப்பொடி செய்து வைத்துக் கொண்டு தினந்தோறும் காலையிலும்மாலையிலும் ஒரு கரண்டிப் பொடி சாப்பிட்டு வந்தால் போதும்.

பாப்பா:—அப்பா! காய் கறிகளிலும் கீரைகளிலும் எவை நல்லவை?

அப்பா:—அம்மா? எவை நல்லவை என்று கூறுவதற்கில்லை. எல்லாம் நல்லவைதான். ஆனுல்நம்முடைய நாட்டில் எல்லாக்காலங்களிலும் சுலபமாகவும், மலிவாகவும் கிடைக்கக்கூடிய கீரைகள் அரைக்கீரையும், முருங்கக்கீரையும், அகத்திக்கீரையும் தான். இந்த மூன்று கீரைகளும் மிக நல்லவைகளுங் கூட. காய் கறிகள் சாப்பிட்டால் நல்லது. அவை

கள் கிடையா விட்டாலும் பாதகமில்லை. கீரைகள் சாப்பிட்டால் போதுமானது.

பாப்பா:—அப்பா! வேறு என்ன சாப்பிடவேண்டும்? சிலர் மாமிசம் சாப்பிடுகிறார்களே, அது சாப்பிடவேண்டுமா அப்பா!

அப்பா :அம்மா! அது சாப்பிட வேண்டு மென்ற கட்டாயமில்லை. அதற்குப் பதிலாக பால், மோர், நெய்அதிகமாகச் சாப்பிட்டால் போதும். மாமிசம் சாப்பிடுகிறவர்களும் அதை வாரத்தில் இரண்டு முறைக்கு அதிகமாகச் சாப்பிடுவது நல்லதன்று· அப்படிச் சாப்பிடுவதிலும் ஈரலைச் சாப்பிடுவது நல்லதென்று டாக்டர்கள் கூறுகிறார்கள். அத்துடன் மாமிசத்தை விட முட்டையே சிறந்ததென்றும் அதையும் பூரணமாக வேகவைக்காமல் அரை குறையாக வேகவைப்பதே நல்லதென்றும் கூறுகிறார்கள்.

பாப்பா:—அப்பா! நாங்கள் சாப்பிடக்கூடாத உணவுகள் உண்டோ?

அப்பா;—ஆம், அம்மா! நீங்களும் சிறுவர்களும் சிறுமிகளும் எண்ணெய்யில் வேகவைத்த பலகாரங்களை அதிகமாக சாப்பிடக் கூடாது. அது போலவே அதிகமான காரமும் புளியும் சாப்பிடமாலிருப்பதே நல்லது.

பாப்பா:—அப்பா! சிலர் வெற்றிலை போடுகிறார்கள், சிலர்பாக்குமட்டும் தின்னுகிறார்கள், அது நல்லதா?

அப்பா:—அம்மா! வெற்றிலை இலை இருக்கிறதே அது நல்ல வஸ்து. ஆனால் அத்துடன் போடும் பாக்கு நல்லதேயில்லை. அதனால் நீங்கள் வெறும் வெற்றிலையை மட்டும் தின்னலாம். பாக்கைத் தொடவே கூடாது. அதுபோலவே தான் புகையிலையையும் தொடக் கூடாது. புகையிலையை வெற்றிலையோடு மென்றாலும் சரி, பீடி சிகரெட்டாகக் குடித்தாலும் சரி, உங்கள் தாதுவுக்கு அதிகமான தீங்கு செய்யும். அவைகள் நல்லனவே யில்லை. அதேமாதிரிதான் உங்களுக்குக் காப்பியும் தேயிலையும் நல்லதில்லை. பெரியவர்கள் கூடஅவை

களை அதிகமாகச் சாப்பிடாமலிருப்பதே ஆரோக்கியமானது. பாலும், மோரும், பழச்சாறும், இளநீருமே எல்லோர்க்கும் நல்ல பானங்கள்.

பாப்பா:—அப்பா! நல்ல குழந்தைகள் பெறுவதற்கு வேறு என்ன செய்ய வேண்டும்?

அப்பா :—அவைகளைச் சொல்லுகிறேன் கேள்.

1. நாங்கள் தூங்குவதைவிட நீங்கள் குழந்தைகள் அதிகமாகத் தூங்க வேண்டும். அதனால் இரவில் அதிக நேரம் கண்விழிக்கக் கூடாது. 9-மணிக்குப் படுத்து, காலை 6-மணிக்கு எழுந்திருப்பது நல்லது. நீங்கள் நன்ருகக் காற்று வீசுமிடத்திலேயே உறங்க வேண்டும். குளிராயிருந்தால் போர்த்திக் கொள். ஜன்னலையும் மூடாதே; முகத்தையும் மூடாதே. எப்போதும் மல்லாந்து படுக்காதே, ஒரு பக்கமாகச் சாய்ந்தே படு. எப்போதும் மூக்கினுலேயே சுவாசிக்க வேண்டும். உண்ணும் பொழுதும் பேசும்பொழுதும் தவிர மற்றக் காலங்களிலெல்லாம் வாயை மூடியே வைத்துக்கொள். காலையில்கண் விழித்தவுடனேயே எழுந்து விட வேண்டும். சில குழந்தைகள் விழித்த பிறகும்படுத்துக் கொண்டிருப்பது தீதாகும்.

2. காலையில் விழித்தவுடன் கண்ணையும் வாயையும் சுத்தம் செய்துகொண்டு ஒரு டம்ளர் ஜலம் குடிக்க வேண்டும். இரவிலும் தூங்கப்போகுமுன் ஜலம் பருகுதல் நல்லது. அப்படிச் செய்தால் மலச்சிக்கல் உண்டாகாது. காலையில் மலங்கழிக்கத் தவருதே. குறித்த நேரத்தில் மலங்கழிக்கப் பழகிக் கொள்ளுதல் அவசியம்.

3. பல்லை நன்ருகத் துலக்கு. மெதுவான பற்பொடியும் வேப்பங் குச்சி, வேலங்குச்சி போன்ற குச்சிகளுமே நல்லது. பிரஷும் பேஸ்டும் அனுவசியம். அவற்றைவிடச் சாதாரண உப்பைப் பொடித்துப் பல்லிலும் ஈறிலும் தேய்த்தல் மிக நல்லதாகும். எதைச் சாப்பிட்டாலும் எதைக் குடித்தாலும் அதற்கு முன்னும் பின்னும் வாயை நன்ருகக்

கழுவிக்கொள். அப்படி அநேகர் செய்வதில்லை. அது பெரிய தவறு. இரவில் பல்லைத் துலக்கிக்கொண்டு தூங்குவது மிகவும் நல்லது.

4. அம்மா! நீ காலையில் தேகப்பயிற்சி செய்யவும் மாலையில் ஆடி ஓடி விளையாடவும் வேண்டும். நீ தினந் தோறும் காலையில் செய்கிறாயே அந்த ஆஸனங்களும் நல்லவைகளே. அதன் பிறகு சிறிது நேரம் வெயிலில், தலையில் படாதபடி நெஞ்சையும் முதுகையும் காட்டிக் கொண்டிரு. அது உடலுக்கு நல்ல பலத்தைக் கொடுக்கும்.

5. காலையில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வது ஆரோக்கியமானது. அடிக்கடி வெந்நீரில் குளித்தால் தாது வளர்ச்சிக்குக் கேடு செய்யும். உடம்பு முழுவதையும் நன்றாகத் தேய்த்துக் குளி. மூத்திரம் பெய்யும்பொழுதெல்லாம் அந்த உறுப்புக்களைக் கழுவுதல் நல்ல பழக்கம். குளிப்பதற்குச் சோப்புக்களைவிட நீ தேய்க்கிறாயே அந்த பாசிப் பயற்றம்பொடியே மிக நல்லது. அதில் அம்மா கொட்டான், பூலாங்கிழங்கு, தாமரை மொட்டு, வெட்டி வேர் என்று சில வாசனைச் சாமான்களையும் பொடி செய்து கலந்திருப் பதால் அதைத் தேய்த்துக் குளித்தால் உன்னுடைய உடம்பு நல்ல வாசனையா யிருக்கிற தல்லவா? சில பெண்கள் ஸ்நானம் செய்து உடம்பு துவர்த்திய பின் முகத்தில் "பவுடர்" பூசுகிறார்களே, அதைவிடக் குளிக்கும்பொழுது மஞ்சள் பூசுவதே சிலாக்கியமாகும்.

6. எவ்வளவுக் கெவ்வளவு காற்றும் வெளிச்சமும் உடம்பில் படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. அதனால் சிறுவர்களும் சிறுமிகளும் குளிர் இல்லாத சமயங்களில் நெஞ்சில் சட்டை போடாமலிருப்பதுதான் நல்லது. சட்டை போட்டாலும் அது இறுக்கமாக இருக்கக்கூடாது. அதோடு நீ உன்னுடைய உடைகளைத் தினந்தோறும் நன்றாகத் துவைத்துச் சுத்தம் செய்துகொள்ள வேண்டும்.

பாப்பா:—அப்பா! இந்த மாதிரி யெல்லாம் நடந்து வந்தால்தான் நல்லகுழந்தைகளைப் பெறலாமோ? அப்படியானால் நான் நீ சொல்லுகிறபடியே செய்கிறேன். அப்பா!

அப்பா:—ஆம், அம்மா! அப்படியே செய், நல்லசுகமும் பலமும் அழகும் உள்ள குழந்தைகளைப் பெறலாம்.

பாப்பா:—அப்படியானால், அப்பா! நீ சொல்லுகிற படி நடந்து வந்தால்ஆணிடம்16-வயதிலும்பெண்ணிடம்13-வயதிலும் தாது முதிரும் என்று கூறினாயே, அந்த வயதில் நல்ல குழந்தைகள் உண்டாகுமோ?

அப்பா:—அம்மா! ஆண் தாது16-வயதிலும் பெண் தாது 13-வயதிலும் பருவமடையும் என்று சொன்னது உண்மை தான். ஆனால் நாம் கடையிலிருந்து மாம்பழங்கள் வாங்கி வருகிறோம். அப்படி வாங்கிவரும் மாம்பழங்களை உடனே சாப்பிட முடிகிறதா?

பாப்பா:—இல்லை அப்பா! சிலவேளைகளில் நன்றாய்ப் பழுத்திருக்கிறது, உடனே சாப்பிடுகிறோம். சில வேளைகளில் நன்றாய்ப் பழுக்கவில்லை, சாப்பிடாமல் நன்றாய்ப்பழுக்கட்டும் என்று பானையில் போட்டு மூடிவைக்கிறோம்.

அப்பா:—அம்மா! அப்படிப் பானையில் போட்டு வைக்கிறோமே, அவைகளைப் பழங்கள் என்று சொல்லுகிறோமா, காய்கள் என்று சொல்லுகிறோமா?

பாப்பா:—அப்பா! அவைகளைப் பழங்கள் என்றுதான் சொல்லுகிறோம், அவைகள் பழங்கள்தானே அப்பா?

அப்பா:—அம்மா! அவைகள் பழங்கள்தான்.

பாப்பா: ஆம், அப்பா, அவைகள் பச்சையாகக்கூட இல்லாமல் மஞ்சளாக இருக்கின்றன அல்லவா அப்பா?

அப்பா:—ஆம் அம்மா! மஞ்சளாகத்தான் இருக்கின்றன அவைகள் பழங்கள்தான். ஆனாலும் சாப்பிடாமல் வைத்து விடுகிறோமே, ஏன்?

பாப்பா:--அப்பா, அதற்குக் காரணம் சொல்லட்டுமா? அவைகள் பழமானுலும் சாப்பிடக் கூடிய அளவு பழுத்துவிடவில்லை, அதனுல்தான் சாப்பிட முடியவில்லை.

அப்பா:--அதுதான் காரணம். அதேமாதிரிதான் அம்மா ஆண்தாது 16 வயதிலும் பெண்முட்டை 13 வயதிலும் பருவமடைந்தபோதிலும் நல்ல குழந்தைகள் உண்டாக்கக்கூடிய அளவு பூரணமான பருவத்தை அடைந்துவிடவில்லை.

பாப்பா:—அப்படியானுல் அவை எப்பொழுது பூரணமான வளர்ச்சி அடையும் அப்பா?

அப்பா:— அம்மா! ஆண்தாது 20 வயதுக்கு மேலும் பெண்முட்டை 18-வயதுக்கு மேலுந்தான் பூரணமான வளர்ச்சியை அடையும். நன்ருகப் பழுத்த பழந்தானே இனிப்பாக ருசியாயிருக்கின்றது?

பாப்பா:—ஆம் அப்பா! பழுக்காத பழம் புளிப்பாகவும் ருசியில்லாமலும்தான் இருக்கிறது.

அப்பா :—அதே மாதிரிதான் அம்மா! பூரண வளர்ச்சியடையாத ஆண்தாதுவும் பெண்முட்டையும் பூரணமாக நல்ல குழந்தைகளைத் தரமாட்டா. ஆதலால் ஆண் 20 வயதுக்குப் பிறகும் பெண் 18 வயதுக்குப் பிறகும்தான் கல்யாணம் செய்துகொண்டு குழந்தை பெறலாம். அப்போதுதான் நல்ல குழந்தைகளைப் பெறுவார்கள்.

பாப்பா :—அப்பா! கல்யாணம் என்று சொல்லுகிருயே, எங்களையும் கல்யாண வீட்டுக்குக் கூட்டிப்போகிருயே. அங்கே அலங்காரம் செய்திருக்கிருர்கள், வாத்தியம் வாசிக்கிருர்கள், விருந்து உண்கிருர்கள், எல்லாம் சந்தோஷமா யிருக்கிறது. அவைதான் கல்யாணம் என்பதோ அப்பா?

அப்பா :—ஆம் அம்மா, கல்யாண வீட்டில் அப்படித்தான் இருக்கிறது. ஆனுல் கல்யாணம் என்ருல் என்ன என்பதைச் சொல்லுகிறேன், கேள்.

பாப்பா :—அப்பா சொல்லு. அப்பா! நீ சொல்கிறது எல்லாம் கேட்கக் கேட்க ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவு மிருக்கிறது. கல்யாணம் என்ருல் என்ன அப்பா?

அப்பா :—அம்மா! இப்பொழுது உன்னிடம் ஒரு கேள்வி கேட்கிறேன், சொல்கிருயா?

பாப்பா :—அது என்ன அப்பா!

அப்பா :—அம்மா! நமக்கும் மற்றப் பிராணிகளுக்கும் என்ன வித்தியாசம் சொல்லு, பார்ப்போம்.

பாப்பா :—அப்பா! நமக்கும் மற்றப் பிராணிகளுக்கு முள்ள வித்தியாசம் என்ன? இது நல்லது, இது கெட்டது, இதைச் செய்யலாம், இதைச் செய்யக்கூடாது என்று நமக்குத் தெரிகிறது. அவைகளுக்கெல்லாம் அது தெரியாது என்று எங்களுக்குச் சொன்ஞயே, அது தானே? அப்பா!

அப்பா :—ஆம், அம்மா! அதுதான் வித்தியாசம். மற்றப் பிராணிகள் எவ்லாம் எதையும் யோசித்து இது நல்லது என்று அறிந்து செய்வதில்லை. மனிதர்கள்தான் அப்படிச் செய்கிருர்கள்.

பாப்பா :—அப்பா! தூக்கணங்குருவி எவ்வளவு அழகான கூடு கட்டுகிறது. அதுமாதிரி நாம் கட்ட முடியுமா?

அப்பா :—ஆம் அம்மா! தூக்கணங்குருவியின் கூடு அழகாகத்தான் இருக்கிறது, அந்த மாதிரி நம்மால் கட்ட முடியாது தான். ஆஞலும் அது கட்டுகிறதே, நம்மைப் போல் ஆலோசனே செய்தா கட்டுகிறது? இல்லை. ஏதோ இயற்கையில் அதற்கு ஒரு பருவத்தில் ஒருவித உணர்ச்சி உண்டாகிறது, உடனே கூடுகட்ட ஆரம்பித்து விடுகிறது. ஆஞல் அப்படியா செய்கிருேம் நாம்?

பாப்பா:—அப்பா! இயற்கை உணர்ச்சியால் செய்கிறது என்கிருயே, நாமும் அப்படித்தானே அப்பா! தாகம் வந்ததும் தண்ணீர் குடிக்கிருேம்.

அப்பா:—ஆம் தாகம் வந்த சமயம் தண்ணீர் குடிப்பது உண்மைதான். ஆனாலும் பார், அம்மா! நாய் வீதி வழியே போகிறது. அதற்குத் தாகம் வந்துவிடுகிறது, உடனே சாக்கடை ஜலத்தைக் குடிக்க ஆரம்பித்து விடுகிறது. நீ பார்த்திருக்கிறாயா?

பாப்பா:—ஆம், அப்பா, பார்த்திருக்கிறேன். காக்கா கூட அப்படிக் குடிக்கிறது அப்பா! சில சமயம் அந்த அழுக்கு நீரிலே குளிக்கக்கூடச் செய்கிறது.

அப்பா:—ஆனால் அந்த மாதிரி நீ தாகம் எடுத்தால் சாக்கடை ஜலத்தைக் குடிப்பாயா?

பாப்பா:--சாக்கடை ஜலத்தையா! அதென்ன அப்படிக் கேட்கிறாய். அதை யார் குடிப்பார்கள்? எவ்வளவு தாகமாயிருந்தாலும் வீட்டில் போய் நல்ல ஜலத்தைத்தானே குடிப்போம்.

அப்பா:—அம்மா, ஏன் நீ சாக்கடை ஜலத்தைக் குடிக்கமாட்டாய்?

பாப்பா:—அப்பா! அது அழுக்கு ஜலம் அல்லவா, அதைக் குடிக்கலாமா?

அப்பா:—பார்த்தாயா இதுதான் வித்தியாசம் நமக்கும் பிராணிகளுக்கும். அவைகள் நல்லதா, கெட்டதா என்று அறியாமலே காரியங்களைச் செய்யும். ஆனால் நாமோ அப்படிச் செய்ய மாட்டோம். எதையும் யோசித்தே செய்வோம்.

பாப்பா:—ஆம் அப்பா! நம்முடைய பசுவுக்கு வைக்கோல் வைத்தால் அது வாயால் அதை இழுத்து எடுத்துத் தின்னுகிறது. ஆனால் அதில் ஏதாவது கீழே விழுந்து விட்டால் மூத்திரத்தில் விழுந்தால் கூட எடுத்துத் தின்னுகிறது. அப்படி நாம் ஏதாவது மூத்திரத்தில் விழுந்து விட்டால் அதை எடுத்துச் சாப்பிடுவோமோ, சாப்பிட மாட்டோம் அல்லவா அப்பா?

அப்பா:--அதேபோல்தான் பசு படுத்துக் கொள்ளும் பொழுது மூத்திரமான இடமாயிருந்தாலும் அதில் படுத்துக் கொள்கிறது. அந்த மாதிரி நாம் அழுக்கான அசுத்தமான இடத்தில் படுப்போமா?

பாப்பா:--ஆம் அப்பா! எனக்கு இப்போது நமக்கும் பிராணிகளுக்குமுள்ள வித்தியாசம் நன்ருகத் தெரிகிறது.

அப்பா:—பார்த்தாயா அம்மா! பிராணிகள் பசி எடுத்தால் உடனே எதையும் தினன் ஆரம்பித்து விடுகிறது. தாகம் எடுத்தால் எந்தஜலத்தையும் குடிக்கஆரம்பித்து விடுகிறது தூக்கம் வந்தால் எந்த இடத்திலும் படுத்துவிடுகிறது. அதுபோல்தான் அவைகள் குட்டிகள் உண்டாகும் விஷயத்திலும் யோசியாமல்தான் காரியங்களைச் செய்ய ஆரம்பித்து விடுகின்றன.

பாப்பா:--அது எப்படி அப்பா? அது எனக்கு விளங்கவில்லையே.

அப்பா :—அதைச் சொல்லுகிறேன கேள். அம்மா! நீ சேவற்கோழி பார்த்திருக்கிருயே. அதற்குப் பசி உண்டானவுடன் என்ன செய்கிறது?

பாப்பா :—அப்பா! அது உடனே குப்பையைப் போய்க் கிண்ட ஆரம்பித்து விடுகிறது.

அப்பா :—அதேமாதிரி சேவற்கோழியின் வயிற்றிலுள்ள ஆண் தாது முதிர்ந்தவுடன் அதைப் பெட்டைக் கோழியின் வயிற்றிலுள்ள முட்டையுடன் சேர்க்க வேண்டும் என்ற உணர்ச்சி அதற்கு உண்டாகிறது.

பாப்பா :—அப்பொழுது அது என்ன செய்யும் அப்பா!

அப்பா :—பசி எடுத்தவுடன் இரை எங்கே கிடைக்கும் என்று தேடப் புறப்படுவதுபோல அது இந்த உணர்ச்சி உண்டானவுடனே பெட்டைக் கோழியைத் தேடுகிறது அப்போது ஒரு பெட்டைக்கோழி அங்கே வருகிறது என்று வைத்துக்கொள்.

பாப்பா :—அப்பா! அந்தப் பெட்டைக் கோழியைக் கண்டவுடனே அதன் வயிற்றுக்குள் ஆண் தாதுவை-

அனுப்புவதற்காக அதன்மேல் ஏறிக் கொத்துமோ அப்பா! அந்தப் பெட்டைக் கோழி நல்லதா என்று கவனிக்குமா அப்பா!

அப்பா :—ஆம், அம்மா! சேவற்கோழி பெட்டைக் கோழிமேல் ஏறிக் கொத்தத்தான் ஆரம்பித்துவிடும். ஆனல் அந்தப் பெட்டைக் கோழி ஆரோக்கியமாயிருக்கிறதா, பருமனுக இருக்கிறதா என்றெல்லாம் கவனிக்காது அம்மா!

பாப்பா :—ஆம், அப்பா! அதெல்லாம் கவனிப்பதற்கு அதற்கு நம்மைப்போல் அறிவேது?

அப்பா :--பார்த்தாயா, அதைத்தான் நானும் சொல்ல வந்தேன், நீ கெட்டிக்காரி, சொல்லிவிட்டாய்.

பாப்பா :--அப்பா! பெட்டைக் கோழி நல்லதாக இரா விட்டால் அது இடும் முட்டைகள் சிறிதாகத் தானே இருக்கும்?

அப்பா :--ஆமாம், அதில் என்ன சந்தேகம்? முட்டைகள் மட்டுமா சிறியதாக இருக்கும்? குஞ்சுகளும் சிறிதாகத்தான் இருக்கும்.

பாப்பா :--அந்தக் குஞ்சுகள் பார்க்க அழகாயிராது, அப்பா!

அப்பா :--ஆம், அம்மா! அவைகள் அழகாயுமிரா, சீக்கிரத்தில் செத்துக்கூடப் போகும்.

பாப்பா :--ஆம், அப்பா! நல்ல பெட்டைக் கோழியாயிருந்தால் பருமனுன முட்டையிடும். குஞ்சுகள் அழகாயும் பலமாயுமிருக்கும்.

அப்பா :--அம்மா! இன்னென்று கேட்கிறேன், சொல்லு பார்ப்போம். பெட்டைக் கோழி நல்லதாயிருந்தால் தான் குஞ்சுகளும் நல்லதாக இருக்கும் என்று சொன்னுயே! அப்படியே பெட்டைக் கோழி நல்லதாக இருப்பதாக

வைத்துக் கொள்வோம். ஆனால் அது மட்டும் போதுமா நல்ல குஞ்சுகள் உண்டாவதற்கு?

பாப்பா : அப்பா! வேறு என்ன வேண்டும்? நீ என்ன கேட்கிறாய், தெரியவில்லையே?

அப்பா:--என்ன அம்மா, இது தெரியவில்லையா? நல்ல குஞ்சுகள் பிறக்க வேண்டுமானால் பெட்டைக் கோழியைப் போலவே சேவலும் நல்லதா இருக்க வேண்டுமல்லவா?

பாப்பா:--ஆம், அப்பா! இதையா நீ கேட்டாய்? வேறு எதையோ கேட்கிறாய் என்று அல்லவோ நினைத்து விட்டேன்? ஆம், அப்பா! பெட்டைக் கோழியும் நல்லதாக இருக்க வேண்டும், சேவலும் நல்லதாக இருக்க வேண்டும்.

அப்பா:--ஆனால் சேவல் பெட்டைக் கோழியைப் பற்றிச் சிந்திப்பதில்லை. பெட்டைக் கோழி சேவலைப் பற்றிச் சிந்திப்பதில்லை. உணர்ச்சி வந்தவுடன் ஆண் தாதுவையும் பெண் முட்டையையும் சேர்த்துவிட ஆரம்பித்து விடுகின்றன. நல்ல முட்டை உண்டாகுமா, நல்ல குஞ்சுகள் உண்டாகுமா என்று யோசிப்பதே இல்லை.

பாப்பா:--ஆம், அப்பா! ஆனால் மனிதர்கள் அப்படி யோசியாமல் செய்வார்களா? செய்யமாட்டார்கள் என்றே எண்ணுகிறேன்.

அப்பா:--ஆம், அம்மா! நீ எண்ணுவது சரிதான். மனிதர்கள் யோசியாமல் செய்யமாட்டார்கள். இன்னும் ஒரு விஷயம் இருக்கிறது அம்மா!

பாப்பா;--அது என்ன அப்பா!

அப்பா:--அம்மா, ஆண் சேவல் தன்னுடைய தாதுவைப் பெட்டைக் கோழியின் வயிற்றுக்குள் போகும்படி செய்து விடுகிறதே, அதன்பின் அது என்ன செய்கிறது?

பாப்பா:--அதன் பிறகு அது கீழே இறங்கிப் போய் விடுகிறது.

அப்பா!—ஆமாம், போய்விடுகிறது. அதன் பிறகு சேவற் கோழி பெட்டைக் கோழியைக் கவனிக்கிறதா? நீ பார்க்கிறாயா, அம்மா?

பாப்பா:--அப்பா! அதற்குப் பிறகு எங்கே கவனிக்கிறது? அது வேறு தெருவுக்குக்கூடப் போய்விடுகிறதே, அப்பா!

அப்பா:—பார்த்தாயா, அம்மா! நாம் எல்லாம் சேர்ந்து வாழ்கிறோமே அம்மா அப்பா குழந்தைகள் எல்லாம் ஒரே குடும்பமாக வாழ்கிறோமே, அப்படி அவைகள் வாழ்கின்றனவா, அம்மா?

பாப்பா:—இல்லை, அப்பா! அது மட்டுமா? தங்கச்சி அம்மா வயிற்றுக்குள் வளர்ந்து வந்ததாகச் சொன்னாயே! அப்பொழுது அம்மா வாந்தி செய்தாள், எவ்வளவோ கஷ்டப்பட்டாள். அப்பொழுதெல்லாம் அப்பா! நீ அம்மாவுக்கு எவ்வளவு உதவி செய்தாய். நான்கூட பார்த்தேனே, அப்பா!

அப்பா:—ஆம், அம்மா! நாம் எல்லாம் கோழிகள் மாதிரி நடப்போமா! நமக்குக் குழந்தை உண்டாயிருக்கிறது என்று தெரியும். அப்பொழுது அம்மாவுக்குக் கஷ்டமாயிருக்கும் என்று தெரியும். இதெல்லாம் கோழிக்கோ இதர பிராணிகளுக்கோ தெரியுமோ?

பாப்பா:—தெரியாது, அப்பா! நமக்கு அம்மா குழந்தை பெறும்போது கஷ்டமாயிருக்கும் என்று தெரியும். அதனால்தானே அப்பா! நீ அம்மா தங்கச்சியைப் பெறும்பொழுது டாக்டர் மாமாவைக் கூட்டி வந்தாய்.

அப்பா :--ஆம், அம்மா! அது மட்டுமா? நீயும் தங்கச்சியும் எங்களுக்குப் பிறந்திருக்கிறீர்கள். உங்களை நாங்கள் எவ்வளவு அன்பாகக் கவனித்து வருகிறோம்? உனக்குத் தெரியுமல்லவா?

பாப்பா :--ஆம், அப்பா! அம்மா எனக்குப் பால் தருகிருள், பழந் தருகிருள், பாவாடை கட்டுகிருள், பாட்டுச் சொல்லிக் கொடுக்கிருள். அப்பா! நீ எனக்கு பொம்மைகள் வாங்கித் தருகிருய். இதெல்லாம் சொல்லித் தருகிருய்.

அப்பா :--இப்படி எல்லாம் மற்றப் பிராணிகள் செய்கின்றனவா, அம்மா?

பாப்பா :--இல்லே, அப்பா!

அப்பா :—இப்பொழுது பார்த்தாயா, அம்மா; நமக்கும் மற்றப் பிராணிகளுக்குமுள்ள வித்தியாசம்? அவைகள் எல்லாம் உணர்ச்சி வந்தவுடனே சரியா, தப்பா என்று யோசியாமல் காரியம் சேய்து விடுகின்றன. நல்ல குஞ்சுகள் வேணுமே என்று யோசிப்பதில்லே. குஞ்சுகள் உண்டாகும் என்றுகூட அவைகளுக்குத் தெரியாது. அதோடு குஞ்சுகள் வந்த பிறகும் ஆண்சேவலும் பெட்டைக் கோழியும் சேர்ந்து குடும்பத்தை நடத்துவதில்லே. பெட்டைக்கோழி குஞ்சுகளேக் கூட்டித் திரிவதும், கொஞ்ச காலத்துக்குத்தான். அதுவும் உணர்ச்சியினுல் தான், யோசனே செய்தல்ல,

பாப்பா :--ஆம், அப்பா! குஞ்சுகள் கொஞ்சம் பெரிதானதும் பெட்டைக்கோழி அவைகளேக் கவனிப்பதில்லே. அவைகளும் தாயைக் தேடுவதில்லே. சேவற் கோழி முதலிலிருந்தே கவனியாமல் போய்விடுகிறது.

அப்பா :—ஆனுல் மனிதர்கள் அறிவுள்ளவர்கள் அல்லவா? அவர்கள் மற்றப் பிராணிகள் மாதிரி நடப்பார்களா?

பாப்பா :—அதெப்படி நடப்பார்கள்? அவர்கள் எதையும் யோசித்துத்தான் செய்வார்கள். அப்படித் தானே செய்ய வேண்டும் அப்பா!

அப்பா :--ஆம், அம்மா! அதனுல்தான் மனிதர்களில் ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமிகளாயிருக்கும்

பொழுது தங்கள் உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும். அறிவை வளர்த்துவர வேண்டும். நல்ல குணங்களை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

பாப்பா :—அப்படிச் செய்தால்தான் நம்முடைய தங்கச்சி மாதிரி நல்ல குழந்தைகள் பிறக்கும் என்று சொன்னுய் அல்லவா? அப்பா! அப்படியேதான் நானும் அண்ணனும் நடப்போம். தங்கச்சியும் பெரியவளாகும் பொழுது அப்படியேதான் நடப்பாள் அப்பா!

அப்பா :—அதுதான் நல்லது அம்மா! அந்த மாதிரி நடந்துவந்தால் சிறுவர்கள் 16வயதிலும், சிறுமிகள் 13 வயதிலும் குழந்தைகள் உண்டாகக் கூடிய பருவத்தை அடைகிறார்கள். ஆனல் நான் முன்னலேயே சொன்னேன், ஞாபகமிருக்கிறதா, அம்மா!

பாப்பா ;—அது என்ன அப்பா! நீ சொல்லு, நான் நினைத்துப் பார்க்கிறேன்.

அப்பா : அம்மா! சிறுவர்கள் 16 வயதிலும், சிறுமிகள் 13 வயதிலும் பருவமடைந்த போதிலும் அவர்களுடைய தாதுக்கள் நல்ல முதிர்ச்சி அடையாமல்தான் இருக்கும், அதனல் அந்தத் தாதுக்கள் சேர்ந்து குழந்தை உண்டானல் அந்தக் குழந்தை அவ்வளவு பலமாகவும் அழகாகவும் இரா. ஆதலால் பருவமடைந்தாலும் நன்றாக முதிர்ச்சியடைவதற்காக இரண்டு மூன்று வருஷங்கள் காத்திருக்க வேண்டும் என்று சொன்னேன். ஞாபகமிருக்கிறதா, அம்மா!

பாப்பா:—ஆம், அப்பா! பழமானலும் உண்ணக் கூடிய பக்குவம் அடைந்த பிறகுதான் உண்ண வேண்டும் என்றும், அதுபோல் நல்ல பக்குவம் அடைந்த பிறகுதான் குழந்தைகள் உண்டாக வேண்டும் என்றும் கூறினயே அதுதானே அப்பா!

அப்பா:—ஆம், அம்மா! ஆனல் அதன்பிறகு கூட்

நல்ல குழந்தை பெறவேண்டுமென்று விரும்புகிறவர்கள் எந்தப் பெண்ணுடனும் சேர்ந்து வாழ விரும்பமாட்டார்கள் இவள் ஆரோக்கியமாக யிருக்கிருளா, அழகா யிருக்கிருளா இவளுக்கு பலமிருகிறதா, அறிவு இருக்கிறதா நல்ல அன்புடையன்ததாஞ, நம்முடன் சேர்ந்து வாழ்வாளா என்றெல்லாம் யோசிப்பார்கள், அப்படிப்பட்ட பெண்ணைத்தான் விரும்புவார்கள். அவளுடன் தான் குழந்தைகள் பெற்றுக் குடும்பம் நடத்துவார்கள்.

பாப்பா: அந்த மாதிரிதான் அப்பா' நீயும் யோசித்துத் தான் அம்மாவுடன் வாழ எண்ணிஞயோ?

அப்பா: ஆம், அம்மா! அப்படி இரண்டு வருஷகாலமாக யோசித்துத்தான் அம்மாவைக் கலியாணம் செய்து கொண்டேன்.

பாப்பா: அப்படியாஞல் அம்மாவும் உன்னைப்பற்றி அந்த மாதிரி யோசிக்க வேண்டாமா?

அப்பா; ஆம், அம்மா! உன்னுடைய அம்மாவும் அந்த மாதிரி என்னைபப்ற்றி யோசித்துத்தான் என்னை மணந்து கொள்ள இசைந்தாள்.

பாப்பா: இந்த விதமாக ஒரு ஆணும் பெண்ணும் நல்ல குழந்தைகள் பெறுவதற்காகவும், ஒன்று சேர்ந்து குடும்பம் நடத்துவதற்காகவும் ஒருவரைப்பற்றி ஒருவர் யோசித்து ஒன்று சேருகிருர்களே, அதற்குத்தான் கல்யாணம் என்று பெயரோ அப்பா!

அப்பா: ஆமாம் அதுதான் அம்மா! இப்பொழுது தெரிந்து கொண்டாயா? மிருகங்கள் முதலியவைகளுக்கு அறிவில்லாததால் குஞ்சுகுட்டிகளை யோசியாமலே பெறுகின்றன மனிதர்களோ யோசித்தே குழந்தைகளைப் பெறுகிருர்கள். அதஞல்தான் அவர்கள் ஆணும் பெண்ணும் அன்பு கொண்டு ஒன்ருக வாழ்கிருர்கள். குழந்தைகள் பெறவேண்டும் என்று ஆசை கொண்ரு அதற்கான அறிவை உபயோகித்து நல்ல

குழந்தைகளைப் பெறுகிருர்கள். அந்தக் குழந்தைகளை நல்ல விதமாக வளர்க்கிருர்கள்.

பாப்பா; ஆம், அப்பா! அந்த விதமாகத்தான் நீயும் அம்மாவும் எங்களை வளர்க்கிறீர்கள், அப்பா! நாங்களும் அந்த விதமாகவே நடந்து கொவ்வோம். எதுவும் யோசியாமல் அவசரப்பட்டுச் செய்துவிட மாட்டோம்.

அப்பா: அப்படித்தான் நடக்க வேண்டும். அம்மா! அதுதான் நல்லது. எங்களைப்போலவே நீங்களும் நடந்தால் உங்களைப் போலவே நல்ல குழந்தைகளைப் பெறுவீர்ாள். அம்மா! ஏதேனும் சந்தேகம் உண்டாளுல் ஏதேனும் தெரியாமற் போளுல் எங்களிடம் வந்து கேளுங்கள். எல்லாம் உங்களுக்கு நாங்கள் தெளிவாகச் சொல்லித் தருவோம்.

பாப்பா; ஆகட்டும், அப்பா! நீ சொல்லுகிற படியேதான் செய்வேன், நீ சொல்லுகிறபடியே நடந்து நல்ல குழந்தைகளைப் பெற வேண்டும் என்றுதான் எனக்கும் ஆசையாயிருக்கிறது.

அப்பா; அம்மா, பார்த்தாயா இப்பொழுது? ஆண் தாதுவும் பெண் முட்டையும் சேர்ந்துதான் செடி கொடிகள், பட்சி பறவைகள், ஆடுமாடுகள் எல்லாம் உண்டாகின்றன. அதே மாதிரி ஆண் தாதுவும் பெண் முட்டையும் சேர்ந்துதான் மனிதர்களும் உண்டாகிருர்கள். அந்த விஷயத்தில் அவைகளுக்கும் நமக்கும் வித்தியாசமில்லை. ஆளுல் அவைகள் யோசித்துச் செய்வதில்லை, நாம் யோசித்துச் செய்கிறோம். அதனுல்தான் நாம் அவைகளைவிட உயர்ந்தவர்கள். அந்த மாதிரியே நீங்களும் நடந்து கொள்ள வேண்டும், அம்மா.

பாப்பா; ஆகட்டும் அப்பா.

(முற்றும்)

# பிற குடும்பக்கலை நூல்கள்

**பொ. திருகூடசுந்தரம்**

| | ரூ. பை. |
|---|---|
| விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை | 12-50 |
| அப்பாவும் மகனும் | 12-00 |
| அண்ணனும் தங்கையும் | 12-50 |
| தந்தையும் மகளும் | 12-50 |
| கேள்வியும் பதிலும் | 12-50 |
| ரதி ரகசியம் | 10-00 |
| குழந்தை எப்படிப் பிறக்கிறது? | 7-50 |

**சீதாலக்ஷ்மி குயிலன்**

| | |
|---|---|
| தாம்பத்ய வாழ்வில் சில பிரச்சினைகள் | 5-50 |
| மனைவியைப் புரிந்து கொள்ளுங்கள் | 5-00 |
| ஆண்மைக் குறைவும் அதன் நிவர்த்தியும் | 7-00 |
| குழந்தை வளர்ப்பு | 4-50 |
| வாத்ஸ்யாயனர் காமசூத்திரம் | 7-50 |
| தேன் சொட்டும் இன்பத் துளிகள் | 7-50 |

தனிப்பிரதி வேண்டுவோர்
புத்தக விலையுடன் ரூ. 3-50 சேர்த்து M. O. செய்க.


## பாரதி பதிப்பகம்

**108, உஸ்மான் சாலை**
**தி. நகர்: சென்னை-17**
போன்: 440205.

அச்சிட்டோர்: மிராக்கல் பிரிண்டர்ஸ் சென்னை-14